அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்

நுகர்வோரின் நம்பிக்கையை வென்ற அரிமரக்
கைத்தொழிலில் உண்மையான தலைமைத்துவம்

2022
ஆண்டறிக்கை

வனஜீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சு

அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்

2022 ஆண்டறிக்கை

அரிமரச் சந்தையில் உண்மையான
தலைமைத்துவத்தை நோக்கி

1968 - 2022

54 வருட முடிவுறாத பயணத்தைத் தொடரும்
அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்

மக்களின் மனதை வென்ற நிறுவனமொன்றாக எதிர்காலத்தை நோக்கி

நோக்கு

தேசத்தின் நம்பிக்கையை வென்ற தரம்மிக்க அரிமரம் மற்றும் மரத்திலான உற்பத்திகளை வழங்குபவராகவும் மரப் பலகைச் சந்தையில் தலைவராகத் திகழ்தல்

செயற்பணி

எம்மிடமுள்ள தொழில்நுட்ப அறிவு நன்மதிப்பு மற்றும் திறன்களைப் பயன்படுத்தி சட்ட ரீதியான சுற்றாடலுக்கு சாதகமான வகையில் தேசிய தேவைப்பாட்டின் பிரகாரம் எமது வாடிக்கையாளர்களின் அரிமரம் மற்றும் மரத்தாலான பொருட்களுக்கான கேள்விக்கு உற்பத்தி செய்து வழங்கல்

சிறந்த அரிமரத் தயாரிப்பு

அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் அரசுக்குச் சொந்தமான ஓர் வணிக நிறுவனமாகும். அது 1968. 04.04 ஆந் திகதிய 1979/6 ஆம் இலக்க வர்த்தமானி மூலம் காணி, நீர்ப்பாசனம் மற்றும் மின்சார கௌரவ அமைச்சரினால் 1957 இன் 49 ஆம் இலக்க அரசாங்க கைத்தொழில் கூட்டுத்தாபன சட்டத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்டதுடன், 1969 நவம்பர் 7 ஆந் திகதிய 14879 ஆம் இலக்க வர்த்தமானி, 1982 பெப்ரவரி 05 ஆம் திகதிய 178/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல், 2001 ஆம் ஆண்டின் ஜுன் 26 ஆம் திகதிய 1190/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மற்றும் 2008 பெப்ரவரி 25 ஆம் திகதிய 1538/7 ஆம் இலக்க வர்த்தமானியின் பிரகாரம் மேலும் நாளதுவரையாக்கப்பட்டது. ஈடுபடுத்தப்பட்ட ஆரம்ப மூலதனம் ரூபா 2.5 மில்லியனாகும். 54 வருடங்களுக்கும் மேற்பட்ட அனுபவம் மற்றும் பழக்கம் கூடிய நிறுவனமொன்றாக அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் உயர் தரத்திலான தளபாடங்கள் தேவையுள்ள ஹோட்டல் உரிமையாளர்களினதும், அரச நிறுவனங்களினதும், தளபாட வடிவமைப்பாளர்களினதும் உட்பட தனியார் கொள்வனவாளர்களினதும் முன்னணித் தெரிவாகக் காணப்படுகின்றது

அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் மிக உயர்ந்த தரம் வாய்ந்த உயர்தர மரத்தினாலான தயாரிப்புக்களை வாடிக்கையாளர்களுக்கு வழங்குவதற்கும் அதிகபட்ச சேவையை வழங்குவதற்கும் முடிந்தவரை முயற்சி செய்கின்றன. அழகான வீடுகள், ஆடம்பரமான ஹோட்டல்கள், நிர்வாக அலுவலகங்கள் மற்றும் வெளிநாட்டு வாசஸ்தலங்கள் என்பவற்றிற்கு எமது விலைமதிப்பற்ற மர உற்பத்திகள் அதிக பெறுமதியைச் சேர்க்கின்றது. நன்றாக நிர்வகிக்கப்படுகின்ற தோட்டங்களிலிருந்து பெறப்பட்ட பெறுமதியான மரத்தினால் செய்யப்பட்ட சிறப்புகள் அலுவலகங்கள் மற்றும் வீடுகளுக்கான மரத்தினாலான பொருட்கள், மரத் தளபாடங்கள் மற்றும் மரத்துண்டங்கள் மற்றும் கிழிக்கப்பட்ட பலகைகள் உற்பத்தி செய்து வழங்குவதினூடாக வாடிக்கையாளரின் உயர் திருப்தியை எதிர்பார்க்கின்றது. அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் புகழ் பெற்ற ஓர் அரச நிறுவனமாக விளங்குவதுடன் பரவலான உயர்தர மற்றும் நீண்ட கால மரப் பொருட்களை சந்தைக்கு வழங்குவதுடன், தயாரிப்புக்கள் அதி நவீன தொழிநுட்பத்துடன் அதி நவீன இயந்திரங்களுடன் கூடிய நவீன வேலைச் சூழலில் உற்பத்திகள் தயாரிக்கப்படுகின்றன.

மனதைக் கவரும் சிறு இருக்கை முதல் தனித்துவமான படுக்கையறைத் தொகுதி வரை வாடிக்கையாளரால் கோரப்பட்ட விலைக்கும் உரிய காலப்பகுதியிலும் உயர் தரத்துடன் கூடிய தயாரிப்புக்களை உற்பத்தி செய்து வழங்கும் இயலுமை அரச மரக் கூட்டுத்தாபனத்திடம் காணப்படுகின்றது. எமது உற்பத்திகளின் தரம் எம்மால் உற்பத்திச் செயற்பாட்டிற்காகப் பயன்படுத்தப்படும் கீழே காட்டப்பட்டுள்ள நடவடிக்கைகள் மூலம் உறுதிப்படுத்தப்படுகின்றன.

எங்கள் தயாரிப்புகளின் தரத்தை எவ்வாறு உறுதிப்படுத்துகிறோம்?

- எங்கள் தயாரிப்புகளுக்கு நிலைபேறான முறையில் நிர்வகிக்கப்படும் காடுகளிலிருந்து பெறப்பட்ட முதிர்ந்த மரங்கள் பயன்படுத்தப்படும்.
- இளைய மற்றும் குறைபாடு இல்லாத உயர் தர மரங்களைப் பயன்படுத்துதல்.
- நன்கு பயன்படுத்தப்பட்ட மரத்தின் பயன்பாடு
- நவீன உற்பத்திச் செயன்முறைகளுக்கு இயந்திரங்களின் பயன்பாடு
- தரம் மற்றும் பிற சான்றழிக்கப்பட்ட மரம் அல்லாத மூலப் பொருட்களின் பயன்பாடு
- நவீன பொருத்துதல் மற்றும் முடிக்கும் நுட்பங்களைப் பயன்படுத்தல்

உற்பத்திகளின் தரம் தவிர கூட்டுத்தாபனத்தில் நிறைவேற்றப்படுகின்ற அனைத்து வகையான தளபாடத் தேவைகளுக்காக இலவச மதிப்பீட்டுச் சேவைகள் மற்றும் அளவிடல் சேவைகள் வழங்கப்படுகின்றன. மேலும், எங்கள் சொந்த விவரக் குறிப்புகளுக்கு அமைய அதிக வருமானத்துடன் தயாரிக்கப்படுவதுடன் பெறப்பட்ட உயர்தர தளபாடங்களுடன் சந்தைக்கு வழங்க நாங்கள் உத்தரவாதம் அளிக்கின்றோம். எங்கள் தயாரிப்பு முறைகளை விரிவாக்கவும், தொடர்ந்து தரமான சேவையை வழங்கவும் சிறந்த வாடிக்கையாளர் சேவைச் சூழலை மேம்படுத்தவும் தொடர்ச்சியாக நடவடிக்கை எடுப்பதற்கும் நாங்கள் உத்தரவாதம் அளிக்கிறோம்.

எமது பணிகள்

நிதி
அடிப்படையில்
உறுதியானது

வீடுகள்
மற்றும் சேவை
நிலையங்களை
நிர்மாணிப்பதற்காக
நிலைபேறான
மூலப்பொருட்கள்
வழங்கப்படும்

நிலைபேறான வன
முகாமைத்துவ
தந்திரோபாயங்கள்
பயன்படுத்தப்பட்டு
சுற்றாடலைப்
பாதுகாப்பதற்கும்
அதிகரிப்பதற்குப்
பங்களிக்கிறது

வருமான
வரி மற்றும்
திறைசேறிக்கு வரி
செலுத்தி சமூக
அபிவிருத்திக்காகப்
பங்களிப்புச்
செய்தல்

விரிவான விலகல்
பரவும் நவீன
மற்றும் சம்பிரதாய
தளபாடங்கள்
வழங்கப்படுகின்றன

பொருளடக்கம்

பக்கங்கள்

நிதிசார் முக்கிய பதிவுகள்	08
நிறுவனத் தகவல்கள்	09
முகாமைத்துவக் குழு	10
தலைவரின் மீளாய்வு	13
பொது முகாமையாளரின் மீளாய்வு	16
எமது பொறுப்புக்கள் மற்றும் எமது வர்த்தகப் பெறுமானங்கள்	21-22
பணிப்பாளர் சபை	23
சிரேஷ்ட முகாமைத்துவக் குழு	24
பணிப்பாளர் சபை மீளாய்வு	25
எமது மேவுகை வலயங்கள்	30
நிறுவன நிர்வாகம்	32
கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் அறிக்கை	35
இடர் முகாமைத்துவம்	38
நிறுவனத்தின் சமூகப் பொறுப்பு	43
வியாபாரப் பொழிப்பு	53
தசாப்தத்தின் தகவல்கள்	56
கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை	57
வருடாந்தக் கணக்குகள்	71
நிதிக் கலைச் சொற்கள்	94

நிதிசார் முக்கிய பதிவுகள்

டிசம்பர் 31 ஆந் திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கானது		2022	2021	வித்தியாசம் %
வருமானம் ஈட்டல் தொடர்பான முக்கிய தரவுகள் மற்றும் விதங்கள்				
வருவாய்	ரூபா .000	4,743,049	5,695,663	-17%
திறைசேறி மற்றும் வருமான வரிகளுக்கு முன்னர் இலாபம்	ரூபா .000	1,015,986	1,496,156	-32%
திறைசேறிக்கு செலுத்திய வரி	ரூபா .000	320,000	100,000	220%
வருமான வரி	ரூபா .000	380,105	259,944	46%
வருடத்திற்கான தேறிய இலாபம்	ரூபா .000	635,881	1,236,212	-49%
உரிமைப்பங்கு மீதான ஈட்டல்கள்	%	8.3	18.3	-54.6%
சொத்துக்கள் மீதான ஈட்டல்கள்	%	6.6	13.4	-50.5%
ஐந்தொகை முக்கிய தரவுகள் மற்றும் விதங்கள்				
மொத்த சொத்துக்கள்	ரூபா .000	9,588,286	9,207,819	4.1%
மொத்த உரிமைப்பங்கு	ரூபா .000	7,665,155	6,757,207	13.4%
மொத்த படுகடன்கள்	ரூபா .000	1,923,131	2,450,612	-21.5%
கடன்/உரிமைப்பங்குகள்	%	25.1	36.3	-30.8%
கடன்/மொத்த சொத்துக்கள்	%	20.1	26.6	-24.6%
ஏனைய தகவல்கள்				
மொத்த ஊழியர்கள்	எண்ணிக்கை.	1,500	1,606	-6.6%
ஊழியர் ஒருவரின் மீண்டெழும் செலவினம்	ரூபா .000	3,162	3,546	-10.8%
ஊழியர் ஒருவரின் வருவாய்	ரூபா .000	677	932	-27.4%







நிறுவனத் தகவல்கள் –2022

கௌரவ மஹிந்த அமரவீர அவர்கள்	-	வனஜீவாசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சு
திருமதி. ஆர். எம். சீ. எம். ஹேரத் அவர்கள்	-	செயலாளர், வனஜீவாசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சு

பணிப்பாளர் சபை –2022

திரு.எம். எஸ். கருணாரத்ன	-	தலைவர் - அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்
கலாநிதி. கே. எம். ஏ. பண்டார	-	பணிப்பாளர் - (வன பாதுகாப்பாளர் நாயகம்)
திருமதி. எஸ். ஏ. சீ. குலதிலக்க	-	பணிப்பாளர் (திறைசேறி பிரதிநிதி)
திரு. பீ. டீ. பண்டார திஸாநாயக்க	-	பணிப்பாளர்
திரு. எம். ஆர். அஜித் குமாரபண்டார	-	பணிப்பாளர்
திரு. பீ. டீ. பீ. பஸ்நாயக	-	பணிப்பாளர்
திரு. டீ .ஜீ. எஸ். தஸநாயக	-	பணிப்பாளர்
திருமதி.கே. ஐ. டீ. பீ. காரியவசம்	-	பணிப்பாளர் சபை செயலாளர்

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

திருமதி. எஸ். ஏ. சீ. குலதிலக்க - குழுத் தலைவர்

கலாநிதி. கே. எம். ஏ. பண்டார - குழு உறுப்பினர்

திரு. பீ. டீ. பண்டார திஸாநாயக - குழு உறுப்பினர்

கணக்காய்வாளர்

கணக்காய்வாளர் நாயகம்

தேசிய கணக்காய்வு அலுவலகம்

306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை

பிரதான வங்கியாளர்

இலங்கை வங்கி

நிதியாண்டு

ஜனவரி 1 ஆம் திகதி முதல் டிசம்பர் 31 ஆம் திகதி வரை

தொலைபேசி : 94112866600-5

தொலைநகல் : 94112866623

இணையத்தளம் : www.timco.lk

முகாமைத்துவக் குழு –2022

பொது முகாமையாளர்/பி.நி.அ	கலாநிதி என்.டீ. ருவன்பதிரண	PhD (Forestry), M.Sc. (Forestry), B.Sc.

பிரதி பொதுமுகாமையாளர்கள்

பி.பொ.மு (நிதி)	திரு.ஜீ.டீ.எஸ். குமாரசிங்ஹ	MBA, B.Sc. (Acc.Fin.Mgt), FCA, ACCA, ACMA
பி.பொ.மு (மனித வள மற்றும் நிர்வாகம்)	திரு.எம்.ஏ.சீ.என். சமரசிங்ஹ	MPM, B.Sc (Business studies) Ad.Dip in Mgt. and Admin.
பி.பொ.மு (செயற்பாடு)	திரு.எம்சீ. தேவேந்திர	M.Sc. (Forestry), B.Sc.
பி.பொ.மு (சந்தைப்படுத்தல்)	திரு.டப்ளியூ.பீ. சமந்த	M.Sc. (Forestry), B.Sc. N. Dip. Teaching
பி.பொ.மு (பொறியியல் மற்றும உற்பத்தி) (பதில்)	திரு.ஜீ.ஜீ.டீ. கமகே	B.Sc., MBS.
பி.பொ.மு. (உள்ளகக் கணக்காய்வு) (பதில்)	திரு.எச்.எம்.எஸ். மாதவ	B.Com (Sp), (PGDipCom)
உ.பொ.மு (ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் பயிற்சி)	திரு.சீ.கே. முத்துமால	PhD in Agricultural Engineering M.Sc. (Forestry), B.Sc. (Agri.) Hon.,
உ.பொ.மு (வலய)	திரு.பீ.கே. அஜித் சந்தன	B.Sc, MBS
உ.பொ.மு (வலய)	திரு.எச் பீ. ரஜவத்த	BA, MBS.

முகாமையாளர்கள்

முகாமையாளர் (சிலிப்பர்கள், மின்கம்பங்கள்)	திரு.டீ.எம்.என். புஷ்பகுமார நில்மினி	B.Sc.MBS.
முகாமையாளர் (இயந்திரப் பொறியியல்)	திரு.ஏ.கே.லசித்த எட்மன்ட்	B.Sc. (Engineering)
முகாமையாளர் (நிதி)	திருமதி.பீ.டீ.என். போவத்த	
முகாமையாளர் (நிதி)	திரு.எச்.ஜீ.ஆர். விஜேநாயக்க	
முகாமையாளர் (பாதுகாப்பு)	திரு.சீ. வீரமன்	
முகாமையாளர் (நிதி) (பதில்)	திரு.யூ.எஸ். மடவல	HNDA, MAAT
முகாமையாளர் (நிதி) (பதில்)	திரு.எச்.எம்.பீ.பீ. ஹேரத	HNDA, FM(ABE)UK, PgD.Fin MBA (UK)
முகாமையாளர் (தகவல் தொழிநுட்பம்) (பதில்)	திரு.ஜே.எம்.எம்.பீ. ஜயசுந்தர	B.Sc. (Sp) Hon.

பிராந்திய முகாமையாளர்கள்

பிராந்திய முகாமையாளர் (தலைமை அலுவலகம்)	திரு.ஆர். விஜேதுங்க	B.Sc. (Agri.)Sp
பிராந்திய முகாமையாளர் (பூஸ்ஸ)	திரு.எம்.டீ.ஸீ. சம்பத்	BA
பிராந்திய முகாமையாளர் (அம்பாறை)	திரு.யூ.பீ.எச். உலுவடுகே	B.Sc
பிராந்திய முகாமையாளர் (பண்டாரவளை)	திரு.டீ.எச். ராஜபக்ஷ	M.Sc. (Forestry), B.Sc.
பிராந்திய முகாமையாளர் (குருனாகல்)	திரு.யூ.எஸ்.எம். பிரனாந்து	BA (sp)
பிராந்திய முகாமையாளர் (கொழும்பு) (பதில்)	திரு.எச்.ஏ. காமினி அல்விஸ்	
பிராந்திய முகாமையாளர் (மொனராகலை) (பதில்)	திரு.எஸ்.ஸீ. ஜயமான்ன	B.Sc.
பிராந்திய முகாமையாளர் (அனுராதபுரம்) (பதில்)	திரு.டீ.எல். அபேநாயக்க	
பிராந்திய முகாமையாளர் (இரத்தினபுரி)	திரு.எச்.எல். நந்தன	B.Sc.MBS.
பிராந்திய முகாமையாளர் (யாழ்ப்பாணம்)	திரு.சிறீ. ஸ்கந்தராசா	
பிராந்திய முகாமையாளர் (மின்னேரியா)	திரு.எச்.பீ.எஸ். திஸாநாயக்க	BA
பிராந்திய முகாமையாளர் (மாத்தறை)	திரு.டப்ளியூ.ஐ. சாரங்க	B.Sc. (Hon.)
பிராந்திய முகாமையாளர் (கண்டி) (பதில்)	திரு.டீ.ஏ. ஹெந்தாவிதாரண	
பிராந்திய முகாமையாளர் (நுவரெலியா) (பதில்)	திரு.டப்ளியூ.டீ.பீ.ஜீ. ஜயசேக்கர	
பிராந்திய முகாமையாளர் (நுவரெலியா) (பதில்)	திரு.சுனில் ஜயரத்ன	

பிரதி முகாமையாளர்கள்

பிரதி முகாமையாளர் (தளபாட வடிவமைப்பு / தரக் கட்டுப்பாடு)	திரு.ஈ.எம்.எம்.பிரனாந்து	
தொகுதிப் பகுப்பாய்வாளர்	திரு.டப்ளியூ.எச்.ஏ. சந்திரகுமார	B.Sc.
பிரதி முகாமையாளர் (மனிதவளம்)	திருமதி.எச்.பீ. பெரேரா	
முகாமையாளர் (சட்டம்)	திருமதி.கே.ஐ.டீ.பீ காரியவசம்	LLB, Attorney at Law
பிரதி முகாமையாளர் (நிதி) (பூஸ்ஸ)-	திருமதி.ஏ.எல். துஷாரி.டி.சில்வா.	HNDA, MAAT
பிரதி முகாமையாளர் (நுவரெலியா) -	திரு.என்.டி.எஸ்.கே.பீ. திலகவர்தன	HNDA, MAAT
பிரதி முகாமையாளர் (நிதி) (கண்டி)	திரு.டப்ளியூ.எம்.ஜீ.எம். விஜேசிங்ஹ	B.Sc.(Bus.Admin.) MAAT.
பிரதி முகாமையாளர் (நிதி) (மொனராகலை)	திரு.ஏ.ஜே. புஷ்பகுமார	B.Sc. (Bus.Admin.) MA
பிரதி முகாமையாளர் (நிதி) (மின்னேரியா)	திருமதி.எம்.டீ.பீ.எம். திஸாநாயக்க	B.Sc. (Acc), MBS.
பிரதி முகாமையாளர் (நிதி)	திருமதி. விதானகே பிராதன அலுவலகம்	
பிரதி முகாமையாளர் (நிதி) (அனுராதபுரம்)	டப்ளியூ.கே. ஜயசிங்ஹ	
பிரதி முகாமையாளர் (நிதி) (கொழும்பு)	திரு.திரு.எஸ்.பீ.ஏ.ஜே.சீ. சமரகோன்	B.Sc. (Finance)
பிரதி முகாமையாளர் (நிதி)பி. அலுவலகம்	திரு.எஸ்.எம். ஹேவகே	B.Sc,Bus.Admin (Bus.Econ.sp), MBS.
பிரதி முகாமையாளர் (நிதி) (குருனாகல்)	திரு.திரு.எஸ்.எச்.ஐ. பிரசாத்	B.Sc.Bus.Admin (Bus.Econ.sp), MBS.

பிரதி முகாமையாளர் (நிதி) பி. அலுவலகம்	திரு.டி.கே.ஜீ.ஜீ. புஷ்பகுமார	B.Com., MBA, MAAT, PgD. Acc.& Fin.
பிரதி முகாமையாளர் (சந்தைப்படுத்தல்)	திரு.டப்ளியூ.டி.ஏ.எஸ். திலகரத்ன	
பிரதி முகாமையாளர் (அரிமரத் தரப்படுத்தல் மற்றும் ஏல விற்பனை)	திரு.டி.பீ.கே.எஸ்.ஜீ. சமரவிக்ரம	B.Sc. (Mkt.Mgt.)
பிரதி முகாமையாளர (அரிமர வழங்கல்)	திரு.பீ.ஏ.நலின் தேசப்பிரிய	
பிரதி முகாமையாளர் (தளபாட வடிவமைப்பு)	திருமதி.எச்.எம்.டீ.எஸ் அபேரத்ன	B.Desing (Hon.) MBA.
பிரதி முகாமையாளர் (அரிமர ஆலை)	திரு.எம்.பீ.என். அருனசாந்த	B.Sc. (Bus.Admin.)
பிரதி முகாமையாளர் (விசாரணை)	திரு.எஸ்.ஏ.டீ. நிரோஷன்	B.Sc.(Bus.Mgt.)
பிரதி முகாமையாளர் (இயந்திரப் பொறியியலாளர்) கல்தெமுல்லை	திரு.எம்.கே.எம். அக்தார்	B.Tech.
பிரதி முகாமையாளர் (தரக் கட்டுப்பாடு) பூஸ்ஸ	திரு.எச்.எம்.எல்.ஈ.ஜீ. ஹேரத்	B.Sc.
பிரதி முகாமையாளர் (தரக் கட்டுப்பாடு) அம்பாறை	திரு.டப்ளியூ.எம்.ஐ.எச். வீரசூரிய	B.Sc.
பிரதி முகாமையாளர் (உற்பத்தி) அலுவலகம	பி.திரு.ஐ.எம்.ஐ.எஸ்.கே. விக்கிரமசிங்ஹ	PgD.Fin. & Mathematics, B.Sc.
பிரதி முகாமையாளர் (கொள்வனவு மற்றும் கப்பல் வாணிபம்)பி. அலுவலகம்	திருமதி.எச்.டி.எஸ். சந்தமாலி	B.B.Mgt.(HR) Sp.,

தளபாடத் தொகுதி முகாமையாளர்கள்

பிரதி முகாமையாளர் (தளபாடத் தொகுதி)- அம்பாறை	திரு.ஆர்.எஸ். பல்லியகே	BLE, Dip. IT & M
பிரதி முகாமையாளர்- கல்தெமுல்ல	திரு.எச்.எம்.யூ.பீ. சோமவீர	B.Sc. (Bus.Admin)

பிரதிப் பிராந்திய முகாமையாளர்கள்

பிரதிப் பிராந்திய முகாமையாளர் (மின்னேரியா)	திரு.கே.எம்.பீ.டீ.சீ. கபிலரத்ன	
பிரதிப் பிராந்திய முகாமையாளர் (அம்பாறை)	திரு.யூ.ஜே.ஜீ.ஏக்கநாயக்க	
பிரதிப் பிராந்திய முகாமையாளர் (கண்டி)	திரு.டப்ளியூ.ஏ.எஸ். விஜேசேகர	
பிரதிப் பிராந்திய முகாமையாளர் (மாத்தறை)	திரு.கே.சந்திரசேன	
பிரதிப் பிராந்திய முகாமையாளர் (கொழும்பு)	திரு.ஈ.எம்.ஏ.கே. எதிரிசிங்ஹ	
பிரதிப் பிராந்திய முகாமையாளர் (கொழும்பு)	திரு.எஸ்.பீ. உடகெதர	BA
பிரதிப் பிராந்திய முகாமையாளர் (மாத்தறை)	திரு.பீ.ஹெட்டிஆரச்சி	B.Sc.
பிரதிப் பிராந்திய முகாமையாளர் (இரத்தினபுரி)	திரு.எஸ்.ஏ.மனோஜ் துஷார	
பிரதிப் பிராந்திய முகாமையாளர் (குருனாகல்)	திரு.ஆர்.பி.பி.டீ. ஜயசிங்ஹ	
பிரதிப் பிராந்திய முகாமையாளர் (அனுராதபுரம்)	திரு.திரு.எஸ்.எம்.எஸ். சிரிவர்தன	
பிரதிப் பிராந்திய முகாமையாளர் (மின்னேரியா)	திரு.எம்.டப்.டப்.பீ. முதன்னாயக்க	
பிரதிப் பிராந்திய முகாமையாளர் (இரத்தினபுரி)	திரு.எச்.ஆர்.எம்.எஸ். குணசேக்கர	

தலைவரின் மீளாய்வு

எம். எஸ். கருணாரத்ன
தலைவர்

இன்னொரு சிரமமான ஆண்டான்றினுள் அரச மரக் கூட்டுத்தாபனம் அடைந்து கொண்ட நிதிப் பெறுபேறுகள் பற்றிய அறிக்கையை வழங்குவதற்கு நான் மகிழ்ச்சியடைகின்றேன். கடந்த மூன்று வருடங்களினுள் வலுவான வெளிப்புறத் தாக்கங்களுக்கு உட்பட்டிருந்தாலும், கவனிக்கப்படத்தக்க செயலாற்றுகையொன்றை வழங்குவதன் பொருட்டு அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் அதற்கான பயணத்தை முகாமை செய்துள்ள விதம் பற்றி நான் மிகவும் பெருமையடைகின்றேன். இது அரச மரக் கூட்டுத்தாபனத்தின் உத்திகள், வெளித் தலையீடுகளைத் தாங்கும் திறன், வினைத்திறன் எனவும் கூட்டுத்தாபனத்தின் பணியாளர் குழு வெளித் தலையீடுகளை சந்தித்து முன்னே செல்வதற்கும் அதற்குள்ள விருப்பம் அது பற்றிய சாட்சியொன்று என நான் நம்புகின்றேன்.

நிதியாண்டினுள் எம்மால் எடுக்கப்பட்ட தொலைநோக்கு செயன்முறைகள் மற்றும் நடவடிக்கைகளினதும் பெறுபேறாக 2022 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான 4743 ரூ. மில்லியன்களும் ஆன விற்பனை வருமானமொன்றினாலும் 1016 ரூ. மில்லியன்களான முன் வருமானமுமாக பதிவு செய்யப்பட்டது. மேலும் உலகளாவிய மற்றும் நிதிச் சவால்களின் மத்தியில் அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் வியாபார நடவடிக்கைகளும்தளராது நடந்தன. கொவிட் 19 தொற்றுநிலையும் 2022 ஆம் ஆண்டில் இடம்பெற்ற பொருளாதார நெருக்கடி நிலைமையின் கீழ் இவ்வாறான நிதி செயலாற்றுகை ஒன்றை நெருங்குவதற்கு அரச மரக் கூட்டுத்தாபனத்துக்கு ஒரு வாய்ப்புக் கிடைத்துள்ளது. அந்நியச் செலாவணி இருப்பினைத் தீர்த்தல், ரூபா குறைந்த அளவாகுதல், உயர் பணவீக்கம், உயர் வட்டி வீதம் மற்றும் வெளியிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட கடனை திருப்பிச் செலுத்தும் போராட்டம் மூலம் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி அண்மைக் காலத்தில் இலங்கை முகம்கொடுத்த கடினமான செயற்பாடுகளாகும்.

2022 ஆம் ஆண்டு எமது ஆரம்ப சக்திகள், நவீன மற்றும் உயர் மட்டத்தில் உற்பத்தியில் பாரிய அளவில் கவனத்தைச் செலுத்திய ஆண்டாகும். இச்சாதாரண நிலைமைகளின் கீழ் அதி பாதுகாப்பு நடவடிக்கைகளையும் ஊக்கமுள்ள பணிக்குழுவினருடன் மேற்கொள்ளப்பட்டது. அதற்கிடையிலே மீண்டும் எமது சூழல் மற்றும் சமூக கலாச்சார செயலாற்றுகையை உயர் மட்டத்தில் விரிவுபடுத்தினோம். மனித வளம் எனும் எமது கூட்டுத்தாபனத்திடமுள்ள மிகப் பெறுமதிவாய்ந்த வளம் என்பது நம்பிக்கையாகும். எமது வாடிக்கையாளர்களுக்கு முடிந்தவாறு உயர் மட்டத்தில் சேவையை செய்வதற்கு அர்ப்பணிப்பாகவுள்ளதும் கூட்டுத்தாபனத்தின் இலக்குகளை அடைந்து கொள்வது இப்பணியை குறையின்றி நிறைவேற்றும் எமது பணிக்குழுவினரின் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சிகளுக்காக 2022 ஆம் ஆண்டிலும் நாம் முதலீடு செய்தோம்.

நிதிச் செயலாற்றுகை

2022 ஆம் ஆண்டில் பொருளாதார மந்த நிலையின் கீழ் அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் 4,743 ரூபா மில்லியன்களை விற்பனை வருமானத்தைப் பதிவு செய்ததோடு, அது 5,696 ரூபா மில்லியன்களான

2021 ஆம் ஆண்டின் விற்பனை வருமானத்துக்கு ஒப்பீட்டளவில் -17% குறைவாகும். எவ்வாறாயினும், இக்கீழிறங்கியதன் கீழும், 1,016 ரூபா மில்லியன்களான வரிக்கு முன்னரான இலாபம் மற்றும் 636 ரூபா மில்லியன்களான வரிக்கு பின்னரான இலாபத்தை ஈட்டுவதற்கும் அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தினால் முடிந்தமை சிறப்பானதாகும். அதன்படி வரிக்கு முன்னரான இலாபம் மற்றும் வரிக்கு பின்னரான இலாபம் 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டளவில் 32% இனால் கீழிறங்கியுள்ளது. எவ்வாறாயினும், அரசிடமுள்ள கூட்டுத்தாபனமாக இக்கடினமான கால எல்லைக்குள்ளும், 320 ரூபா மில்லியன்கள் திறைசேரி வரியாக வழங்கியமை பற்றி நாம் பெருமிதமடைகின்றோம்.



அதற்குச் சமமாக, 2021 ஆம் ஆண்டில் 13% ஆன வரிக்கு முன்னரான சாதாரண சொத்துக்கள் மீதான இலாபம் (ROA) 2022 ஆம் ஆண்டில் 6.6% வரை கீழுறங்கியுள்ளதோடு, 2021 ஆம் ஆண்டில் 18.3% ஆன வரி பின்னர் சாதாரண பகுதியின் கீழ் மீதான வருமானம் (ROE) 2022 ஆம் ஆண்டில் 8.3% வரை கீழ் இறங்கியுள்ளது. பொருளாதார நெருக்கடி காரணமாக ஏற்பட்ட கஷ்டங்கள் இவ்வீழ்ச்சிகளுக்கு அடிப்படைக் காரணமாக அமைந்தது. அவ்வாறாயினும், அனைத்து சொத்துகள் மற்றும் பகுதிகள் வருமானத்தை ஈட்டுவதற்காக பாரிய பங்களிப்பினை வழங்கியுள்ளதோடு, அதன் மூலம் கூட்டுத்தாபனத்தினால் பொருத்தமான ஆலோசனை மூலதன முகாமைத்துவ கொள்கையொன்றை நடத்திச் செல்கின்றது என இதன் மூலம் தெளிவாகின்றது.



எதிர்காலப் பயணம்

குறுங்கால மற்றும் மத்திய கால இலங்கை பற்றிய நோக்கு நிலையற்றது என்பதோடு, நீண்ட கால நிலைத்தன்மை அரசியல் சூழல் மற்றும் சர்வதேச நிதி நிதியத்தின் உதவியுடன் கடன் மறுசீரமைப்பதன் அடிப்படையில் முன்னறிவிப்பு செய்யப்படும். அண்மைக் கால நிகழ்வுகள் புதிய அரசியல் கலாச்சாரத்துக்கும் இலங்கையின் நீண்ட கால செழிப்புக்காக உதவியாக அமையும் எனும் எதிர்பார்ப்புடன் எதிர்காலம் பற்றி நன்றாக நினைக்கின்றேன்.

எமது வியாபாரத்தில் பாதுகாப்பான தன்மை அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் சிறு தூரத்திற்கு மாறுபடுபட வேண்டும் என்பதோடு, உறுதியான இருப்பு மற்றும் நிறுவன திறன்கள் கனிமங்கள் உள்ளடக்கப்படுவதன் மூலம் சந்தைப் பகுதியைப் பெற்றுக் கொள்வதற்கு சந்தர்ப்பம் ஏற்படுத்தப்படும் என நம்புகின்றேன். மேலும், தொடர்ச்சியான போராட்ட எண்ணக்கருவினை எமக்குள் ஏற்படுத்திக் கொள்வதோடு, எமக்கு முகம்கொடுப்பதற்கு ஏற்படும் சவால்கள் பற்றிய தெளிவான புரிந்துணர்வுகளினாலும் சந்தையினுள் போட்டியாளராக இருப்பதற்கும் செயல் நடைமுறையை எடுப்போம்.

நாம் சவால் மிகுந்த புது வருடமொன்றிற்கு நுழைவதனால் கூட்டுத்தாபனத்தினால் எப்போதும் நிலைமைபகுப்பாய்வுகள் மேற்கொள்ளப்படுவதோடு, அப்பகுப்பாய்வுகளின் பெறுபேறுகளின் அடிப்படையில் முன்னர் தயாரிக்கப்பட்ட திட்டங்களை மீளாய்வு செய்வோம். எனினும் கடந்த ஆண்டுகளின் வெற்றியைக் கொண்டு வரும் செயன்முறையில் முக்கியமாக

உறுதிப்படுத்தப்பட்ட "கூட்டுத்தாபனத்தின் உறுதியான அடிப்படை, உறுதியான உத்திகளைப் போன்றே வியாபார மாதிரிகளில் தாக்குப் பிடிக்கும் திறனும் செயல் என" எதிர்கால சவால்களை வெற்றி கொள்வதற்கு அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்துக்கு உதவியாக அமையும் என நாம் நம்புகின்றோம்.

எமது ஆரம்ப வியாபாரத்தைக் கட்டியெழுப்புவதற்கும் விருத்தி செய்வதற்கும் உள்ள சந்தர்ப்பங்களை உபயோகித்துக் கொண்டு சவால்களுக்கு வெற்றிகரமாக முகம்கொடுப்பதற்கு அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்துக்கு திறனும் முன்ஆயத்தமும் உள்ளது எனபது எனது நம்பிக்கையாகும். அதற்கிடையிலே, எமது விருத்திப் பயணத்துக்கு வழிகாட்டும் எமது வியாபாரப் பெயரினை மேலும் உறுதி செய்து கொள்வதற்குத் தேவையான முதலீடுகளையும் எமது வெற்றிற்கு உதவியாக அமையும் இருப்புநிலைக் குறிப்பிலிருந்து வெளிப்புறக் காரணிகளையும் உறுதிப்படுத்திக் கொள்வதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம். "எமது வாடிக்கையாளர்களுக்காக எம்மால் நிர்மாணிக்கப்படும் பெறுமதிகளை மேலும் உயர்த்தும் எதிர்பார்ப்பு" இனால் எம்மை முன்னோக்கி செயற்படுத்தப்படும் என நான் கவனிக்கிறேன். அவ்வெதிர்பார்ப்புக்கு இணக்கமாக சமூக மற்றும் சூழல் ரீதயாக பொறுப்புக் கூற வேண்டிய அமைப்பொன்றாக எமது தனித்துவத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு பணிகளை மேற்கொள்வது போன்றே, எமது வாடிக்கையாளர்களுக்கு நிலையான பெறுமதியொன்றை வழங்குவதனை உறுதிப்படுத்துவதற்காக அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் தமது முழுமையான கவனத்தைச் செலுத்தியுள்ளது. மேலும், தற்கால அரசாங்கத்தினால் உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு ஏற்றுமதிக்காக வழங்கியுள்ள உதவியை முழுமையாகப் பயன்படுத்துவதற்கு கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுக்கின்றது.

எனது நன்றி நவிலல்

பணிப்பாளர் சபை சார்பாக கௌரவ வனஜீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சர் அவர்களுக்கும், அமைச்சின் செயலாளர் உட்பட பணிக்குழுவினருக்கும், வன பாதுகாவலர் நாயகம் உட்பட அத்திணைக்களத்துக்கு இணைக்கப்பட்ட அனைத்து பணிக்குழுவினருக்கும், ஏனைய அனைத்து அரச அதிகாரிகளுக்கும், எமக்கு வழங்கிய ஒத்துழைப்புக்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்வதற்கு இதனை சந்தர்ப்பமாக்கிக் கொள்கின்றேன்.

மேலும், பணிப்பாளர் சபை சார்பாக, பொது முகாமையாளர்/ பிரதான நிறைவேற்று அதிகாரி மற்றும் அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் ஏனைய அனைத்து பணிக்குழுவினருக்கும் அவர்களின் ஒத்துழைப்பு, அறிவு மற்றும் திறன்கள் உட்பட வெற்றியை நோக்கிப் பறக்கும் பயணத்தில் அவர்களின் விசுவாசம் மற்றும் அர்ப்பணிப்புக்காக விசேடமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

2023 ஆம் ஆண்டு இலகுவான ஆண்டாகும் என நாம் எதிர்பார்க்கவில்லை. குறுங்கால சவால்களைப் பொருட்படுத்தாது நீண்ட கால எமது கவனத்தைச் செலுத்தியதோடு, எமது திறன்களை உயர்ந்த பட்ச பெறுபேற்றை வழங்குவதற்கு அர்ப்பணிப்புடன் உள்ளோம். மேலும் எமது, இலக்குகளை அடைந்து கொண்டு வாடிக்கையாளர்களுக்கு உயர்ந்த பிரதிபலன்களை வழங்குவதற்கு நாம் அர்ப்பணிப்புடன் உள்ளோம்.



எம். எஸ். கருணாரத்ன
தலைவர்
அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்

பொது முகாமையாளரின் மீளாய்வு – 2022

கலாநிதி என். டீ. ருவன்பதிரண
பொது முகாமையாளர் – அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்

கடந்த வருடங்களைப் போன்றே 2022 ஆம் ஆண்டுக்காக அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கையை உங்களுக்கு முன்வைப்பதற்கு கிடைத்தமை எனக்கு மிக்க மகிழ்ச்சியைக் கொடுக்கின்றது. நாட்டில் நிலவிய அரசியல் மற்றும் பொருளாதார சூழலில் ஏற்பட்டுள்ள கஷ்டங்களுக்கு மத்தியிலும், மீளாய்வு செய்யும் ஆண்டில் நிலையான செயலாற்றுகை ஒன்றைக் காணக் கிடைத்தது. கடந்த ஆண்டினைப் போன்றே அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் சவாலான நிலைமைகளுக்குத் தயார் எனவும் அவற்றை வெற்றி கொள்வதற்கு முடியும் என இவ்வாண்டிலும் காட்டியுள்ளது. தேசிய தொற்றுநோய் ஒன்றுக்கு (கொரோனா) முகம்கொடுக்க வேண்டிய போதே கட்டுப்படுத்த முடியாத, உயர்ந்து செல்லும் வீக்கம், ரூபாவின் பெறுமதியின் ஏற்ற இறக்கங்கள் மற்றும் அந்நியச் செலாவணி இருப்பு வீழ்ச்சியடைதல், சந்தித்து இலங்கை பொருளாதார நிலையற்ற கட்டத்தை கடந்து கொண்டிருக்கின்றது. இந்நிலைமையின் கீழ் சகல சமூக, பொருளாதார வகுப்பிலுமுள்ள இலங்கையர்களுக்கு இதற்கு முன்னர் எப்போதும் காணாத கஷ்டங்களுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. நிலையான பொருளாதாரம், அரசியல் மற்றும் அரச கொள்கை ரீதியான சூழலொன்றின் ஒத்துழைப்புடன் IMF நிகழ்ச்சித்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டதன் மூலம் இலங்கையை பொருளாதார மீட்சியினை நோக்கி கொண்டு செல்லும் என நாம் எண்ணுகிறோம். எவ்வாறாயினும் இலங்கை பொருளாதார ரீதியாக குறுகிய கால மற்றும் மத்திய கால தடைகளுக்கு இன்னும் முகம் கொடுத்துக் கொண்டிருக்கின்றது. இவ்வாறான சூழ்நிலையிலும் தேசிய அரிமரத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கான ஒத்துழைப்பினை வழங்குவதற்கு நாம் தொடர்ந்தும் இணைந்திருக்கின்றோம்.

அரிமரக் கைத்தொழிலில் உண்மையான தலைவரொன்றாக

அரிமரக் கைத்தொழிலில், முதன்மைத் தலைவரொருவராக, எமது சேவைகளை சிறந்த மட்டத்தில் வழங்கி எமது தேசத்தின் நம்பிக்கையை உறுதி செய்து கொள்வதற்கு எமதி குழுவினர் முதன்மையாக அர்ப்பணிப்புடன் செயலாற்றினர். 54 வருட கால எல்லைக்குள் ஆரம்பத்திலிருந்தே அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் ஊழியர்கள் எமது கௌரவமான வாடிக்கையாளர்களுடன் மிகவும் நெருக்கமானதும் விளைதிறனானதுமான ஒத்துழைப்புடன் பணியாற்றி எமது வழங்கல்கள் மற்றும் விற்பனை அமைப்பினை உறுதிப்படுத்தினோம்.

மாற்றமடையும் சூழலின் தேவைகளைப் பூர்த்தி செய்து அரிமர உற்பத்தி மற்றும் விற்பனையை மேம்படுத்துவதற்கு அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் தொடர்ந்தும் தமது அர்ப்பணிப்பை உயர்ந்தளவில் மேற்கொண்டு வருகின்றது. அதனால் அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்துக்கு நாட்டிற்குள் மிகவும் நம்பிக்கையானதும் சிறந்த நிலையிலுமான அரிமரம் மற்றும் அரிமரத் தயாரிப்புக்களை வழங்கும் முதல்வனாவதற்கு இன்னும் முடியுமாக உள்ளது. அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் பிராந்திய, அலுவலகங்கள் 12 உம், களஞ்சியங்கள் 51 உம், காட்சியறைகள் 9 உம், அரிமர வளாகங்கள் 3 உம், தளபாட

தொழிற்சாலைகள் 3 உடனும் நாடளாவிய ரீதியில் செயற்பாட்டு வலையமைப்பினூடாக முகாமை செய்து செயற்பாடுகளை மேற்கொள்கின்றது.

அண்மையில் பொருளாதாரத்தின் பின்னடைவு மற்றும் எரிபொருள் நெருக்கடியின் பிரதிபலனாக ஏற்பட்ட அனைத்து கஷ்டங்களுக்கும் முகம் கொடுப்பதற்கு அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் உயர்ந்த பட்சம் அர்ப்பணிப்படன் செயற்பட்டது. கடந்த ஆண்டு சவால்மிக்க ஆண்டாக இருந்தாலும், தடைகளுடன் மாறுபடும் சந்தை நிலைமைகளுக்கு இசைவாக்கமடைவதற்கு தமது செயற்பாட்டுத் திட்டத்தினை தொடர்ச்சியாக நடத்திச் சென்று, தமது மூலோபாய முயற்சிகளைப் பயனுள்ளதாக செயற்படுத்துவதற்கு அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்துக்கு முடிந்தது.

உகந்த செயல்திறன்

தற்கால நிதியாண்டிற்குள் வழங்கப்பட்ட உகந்த செயல்திறன், அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் மூலோபாயமாக செயற்பட்டுள்ளதென சாட்சி கூறுவதோடு அதன் பிரதிபலனாக மாறுபடும் சந்தை நிலைமைகளுக்காக இணங்குவதற்கு முடிந்துள்ளது.

2022 ஆண்டின் இறுதியில், நாம் எமது இலக்குகளைப் பூர்த்தி செய்து கொண்டு எமது திறன் மட்டத்தை விரிவுபடுத்தினோம். எவ்வாறாயினும் நாட்டில் அரசியல் மற்றும் பொருளாதார பின்னணியுடன் நிறுவப்பட்ட இலக்குகளை அடைந்து கொள்வதற்காக சகல குழுவினதும் செயற்பாட்டுப் பணிகள் சவாலாக உள்ளன. 2022 ஆண்டில் நிறைவடைந்த நிதியாண்டில் அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் வருமானம் 4743 ரூபா மில்லியன்களாகும். 2022 ஆம் ஆண்டு வெற்றியான ஆண்டொன்று என்பதோடு அனைத்து சவால்களுக்கும் முகம்கொடுத்து 1016 ரூபா மில்லியன்களை ஈட்டுவதற்கு முடிந்தது. எமது வெற்றியின்படி இவ்வருடத்தலும் ஈட்டுவதற்கு முடியுமான வரிகளுக்கு முன்னரான வருமானமான 1016 ரூபா மில்லியன்கள் ஆனாலும் அது முன்னைய ஆண்டில் 1496 ரூபா மில்லியன்கள் ஆக இருந்தது. நிலவும் தடைகளைச் சந்தித்து கடந்த ஆண்டை விட மேலதிக இலாபத்தை ஈட்டுவதற்கு முடியாவிட்டாலும் நிர்வாகச் செலவுகள், நிதிச் செலவுகள் போன்ற எமது செலவுகளைப் பூர்த்தி செய்து கொள்ள முடிந்தது. அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தினால் 1039 ரூபா மில்லியன்கள் நிர்வாகச் செலவுகளாகவும், 955 ரூபா மில்லியன்கள் விற்பனை மற்றும் பகிர்ந்தளிக்கும் செலவுகளாகவும் இவ்வருடத்தினுள் செலவு செய்யப்பட்டுள்ளது. இவ்வருடத்தின் இலாபம் குறைவதற்கான பிரதான காரணமாக அமைவது எரிபொருள் விலை அதிகரித்தல், போக்குவரத்து செலவு அதிகரித்துச் சென்றதுமாகும். நிலவும் பொருளாதார நெருக்கடி 2022 ஆண்டில் கவனிக்கப்பட வேண்டியதாக நிறுவன பணப் பாய்ச்சலுக்கு தாக்கம் செலுத்துகின்றது. அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் உற்பத்திக் கூறுகளிடையில் 2022 ஆம் ஆண்டில் குற்றிகளிலிருந்து பெறப்பட்ட வருமானம் ஏனைய கூறுகளை விடவும் உயர் பெறுமதியொன்றைக் கொண்டு வந்துள்ளது.

கூறுகளின்படி அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் செய்யும் உற்பத்திகள்



தேசத்தின் நம்பிக்கையை வென்ற உற்பத்திகள்

அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தினால் உயர் தரத்தில் குற்றிகள், கிழிக்கப்பட்ட மரங்கள், சிலிப்பர், வேலிக் கம்பங்கள், மின் கம்பங்கள், யானைவேலிக் கம்பங்கள் மற்றும் தளபாட உற்பத்திகளை மேற்கொள்கின்றது. இலங்கையின் அரச பிரிவில் பிரதான அரிமர வழங்குனர்களாவது அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் ஆகும். ஏனைய அரிமர தொழிற்துறையுடன் போட்டியிடுவது கடினமாக இருந்தாலும் நம்பிக்கையான உயர் தரத்தில் பொருட்களை வழங்குவதனால் அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் தொடர்ந்தும் தேசத்தின் இதயத்தினை வெல்கின்றது. பிரதானமாக அரிமரத்தை வழங்கும் வியாபார நிறுவனமாக மொரட்டுவை அரிமர தொழிற்சாலையினருக்காக அரிமர வழங்கல்கள் மேற்கொள்ளப்படும். பல

வருடங்களாக எமது சிலிப்பர்கள், யானைவேலிக் கம்பங்கள், வேலிக் கம்பங்கள் மற்றும் மின்கம்பங்களைக் கொள்வனவு செய்த எமது பிரதான நம்பிக்கையான வாடிக்கையாளர்களாக இலங்கை புகையிரதத் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம் மற்றும் இலங்கை மின்சார சபையினருமாகும். மேலும் எமது நம்பிக்கையான வாடிக்கையாளர்கள் இன்னும் எமது உயர் தரத்திலான தளபாடங்களை நோக்கிச் செல்கின்றனர். எமது தளபாட உற்பத்திகளுக்காக எந்நாளும் சிறந்த பதில்கள் நுகர்வோரான மக்களிடமிருந்து கிடைத்துள்ளன.

வெற்றி

அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் ஊழியர்கள் சுமார் 1500 பேரினைக் கொண்டதோடு வருடாந்த வருமானமாக சமார் 4.7 ரூபா மில்லியன்களை ஈட்டும் நிறுவனமொன்றாகும்.கடந்த பல வருடங்களுள் எரிபொருள் மற்றும் பொருளாதார நெருக்கடியினுன் 1016 ரூபா மில்லியன்களான வருமானத்தைப் பெற்றுக் கொள்வதற்கு எமது கூட்டுத்தாபனத்தினால் முடிந்தது. இவ்வாறான வெற்றியைப் பாராட்டி தேசிய மட்டத்தில் உற்பத்தி மற்றும் சேவைக் கைத்தொழிலுக்காக இலங்கை தேசிய கைத்தொழில் சபை மற்றும் தேசிய வணிக சபையினால் ஏற்பாடு செய்யப்பட்ட விருது விழாவில் சிறந்த விருதினைப் பெற்றுக் கொள்வதற்கும் அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தினால் முடிந்தது. அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் கடந்த 54 வருட வரலாறு பூராகவும் பல வருடங்கள் தேசிய வியாபார அதிசிறந்த தங்க விருதுகளினாலும் சிறப்பிக்கப்பட்டனர்.

நிறுவனத்தின் சமூகப் பொறுப்புக்கள் மற்றும் அதற்கான அர்ப்பணிப்புக்கள்

நிறுவனத்தின் சமூகப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக வருமானம் ஈட்டுவதற்கு அப்பாற் சென்ற சமூகச் செயற்பாடொன்றை அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் மூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது. நிறுவனம் மற்றும் சமூகம் எனும் இரு பிரிவினையும் உறுதிப்படுத்துவதற்கு அர்ப்பணிப்பாகவுள்ள அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் ஆராய்ச்சி அபிவிருத்தி மற்றும் பயிற்சிப் பிரிவின் மூலம் இந்த நடவடிக்கைகள் அடிக்கடி மேற்கொள்ளப்படுகின்றது.

அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் ஆராய்ச்சி அபிவிருத்தி மற்றும் பயிற்சிப் பிரிவினால் 2022 ஆண்டில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்காகச் செலவு செய்யப்பட்ட முழுத் தொகை ரூபா. 3,855, 849 ஆவதோடு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் 70 க்காக சேவை முன்மொழிவுகள் 861 இனை பயிற்றுவித்துள்ளது. 16 அதிகாரிகளுக்காக சர்வதேச பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் 3 இற்கு நிகழ்நிலை முறையின் மூலம் கலந்து கொள்ளச் செய்துள்ளது. மேலும் அரிமரக் கைத்தொழில் சம்பந்தமாகவுள்ள NVQ பாநெறிகள் பலவும் நடாத்தப்பட்டுள்ளன. இப்பயிற்சிகளைப் பெற்றவர்கள் 404 க்கும் மேலதிகமாக நடாத்தப்பட்டுள்ள வெளிப்பயிற்சி நிகழ்ச்சிகள் மூலம் பயிற்றுவிக்கப்பட்டனர். இதற்கு மேலதிகமாக அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் ஆராய்ச்சி மற்றும் பயிற்சிப் பிரிவு நிறுவனத்தின் வியாபாரத் தேவைகள் உட்பட இத்துறையில் எழும் பிரச்சனைளைத் தீர்ப்பதற்கு சமூகத்துக்குத் தேவையான புதிய அறிவைப் போன்றே அரிமரம் தொடர்பான ஆய்வுகளையும் மேற்கொள்கின்றது. அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் ஆராய்ச்சி மற்றும் பயிற்சிப் பிரிவினால் அடிக்கடி அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. அறிவினை வெளி சமூகத்தினருடன் பகிர்ந்து கொள்வதற்கு எப்போதும் மாநாடுகள் மற்றும் கட்டுரை வெளியீடுகள் போன்றவற்றை வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கிறது. ஆய்வு பத்திரங்கள் 2, சஞ்சிகைகள் 4 போன்றவை உட்பட கட்டுரைகள் 6 உம் 2022 இல் வெளியிடப்பட்டுள்ளன.

அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் ஆராய்ச்சி அபிவிருத்தி மற்றும் பயிற்சிப் பிரிவின் ஒரு பிரதான பணியொன்றாக அமைவது புதிய தொழிநுட்பத்தைப் பயன்படுத்தி அரிமரங்களின் உள்ளக இழையத்தைப் பகுப்பாய்வு செய்வது மரங்களை இனங்கண்டு கொள்வதாகும். வருடாந்தம் மரங்களை இனங்கண்டு கொள்ளும் சான்றிதழ் 150-200 மற்றும் ஏனைய அரிமரம் பற்றிய அறிக்கைகள் அரச மற்றும் அரசு அல்லாத நிறுவனங்களுக்கு வெளியிடப்பட்டன. மரங்களை இனங்கண்டு கொள்வதற்கு மேலதிகமாக அரிமரங்களின் உறுதித்தன்மை பற்றிய ஆய்வுகளான MOR, MOE, சுருக்கமான பரிசோதனை, அழுத்த பரிசோதனையும் அடர்த்தி தொடர்பான பரிசோதனையும் கால இருப்பு

மற்றும் பாதுகாப்பு முறையான BORON,CCB பரிசோதனை போன்ற பாதுகாப்புகளைப் பயன்படுத்திக் கொண்டு மேற்கொள்ளப்படும் பரிசோதனையும் இடம்பெறுகின்றது.

அதற்கு மேலதிகமாக அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் 14 பிராந்திய அலுவலகங்கள் முழுவதிலும் வியாபித்துள்ள நாற்றுமேடைகள் 28 இனூடாக கன்றுகளை உற்பத்தி செய்கின்றது. அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் நாற்றுமேடைகளில் உற்பத்தி செய்யப்பட்ட கன்றுகள் 2022 ஆம் ஆண்டில் வெவ்வேறுபட்ட மரநடுகை நிகழ்ச்சிகளின் மூலம் பகிர்ந்தளிக்கப்பட்டன. SLASS உடன் இணைந்து 2022 ஆம் ஆண்டில் வேவெல்தெனிய வீரசூரியகந்த வித்தியாலயத்தில் Little forester மரநடுகை நிகழ்ச்சி நடத்தப்பட்டது. மரநடுகை செயற்பாடுகளுக்காக கன்றுகள் தவிர்ந்த விவசாய உபகரணத் தொகுதியும் அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் வெளியீடுகளும் (நிலையான வன முகாமைத்துவம், உயிர்ப் பல்வகைத்தன்மை, மர தளபாட நிர்மாணக் கலை போன்ற மற்றும் வெவ்வேறு மர இனங்கள் பற்றிய பத்திரங்கள்) தொகுப்பொன்று பாடசாலைக்கு அன்பளிப்பு செய்யப்பட்டது.

எதிர்கால நோக்குகளும் எதிர்பார்ப்புக்களும்

உரிய ஆண்டினுள் அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் தடைகளுக்கு சரியாக முகம்கொடுத்துள்ளதோடு தொற்றுநோய் காலப்பகுதியினுடன் ஆரம்பிக்கப்பட்ட கடினமான பாதையில் பயணம் செய்து சிறந்த பெறுபேற்றைப் பெற்றுள்ளது. கடந்த காலத்தில் பெற்றுக் கொள்ளப்பட்ட அனுபவங்களின் மூலம் எதிர்வரும் வருடங்களிலும் மூலோபாய செயற்பாடுகளைப் பயன்படுத்தி வெற்றியீட்டிக் கொள்வதற்கு எதிர்பார்க்கின்றது. மேலும் எமது முகாமைத்துவத்திலிருந்து அப்பாற்பட்ட நிலையற்ற பொருளாதார சூழலில் அந்நியச் செலாவணி குறைதல், பணவீக்கம் அதிகரித்தல், வட்டி வீதம் உயர்வடைந்து செல்லல் மற்றும் ரூபாவின் பெறுமதி குறைவடைந்து செல்வதன் மூலம் நபர்களுக்கும் நிர்மாணக் கைத்தொழிலில் எதிர் காலத்தினுள் மிகக் கஷ்டங்கள், பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க வேண்டியதனால் அதன் மூலம் எமது செயற்பாட்டுச் சூழலும் தாக்கத்துக்கு உள்ளாவதனைத் தடுக்க முடியாது.

இலங்கையில் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தமையால் மரக் கைத்தொழில் போன்ற கைத்தொழில்கள் கடுமையாக தாக்கத்துக்கு உள்ளாகியது. இத்தடைகளைச் சந்தித்து அரச மரக் கூட்டுத்தாபனத்துக்கு உயர்ந்த செயலாற்றுகையொன்றைப் பெற்றுக் கொள்ள முடிந்தமை செலவு மேம்படுத்தல்கள் மூலம் உற்பத்திப் பெறுமதியை உயர்ந்த பட்சமாக்குவதனூடாகவும் உற்பத்தித் தொகுதியின் அடிப்படையிலான அரிமர உற்பத்தியை விருத்தி செய்வதினூடாகவும் வினைத்திறனான குழு முகாமைத்துவத்தினூடாகவும் வியாபார சிக்கல்களின் மத்தியிலும் அறிவினையும் அனுபவத்தினையும் கட்டியெழுப்புவதன் மூலமாகவும் ஆகும். அரச மரக் கூட்டுத்தாபனத்தினால் அரிமர ஏற்றுமதி மற்றும் மரக் கைத்தொழிலுக்குத் தேவையான இயந்திர உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் எதிர்காலத்தில் செயற்படுத்தப்படும். ஏற்றுமதிக்குள்ள வரையறைகளை நீக்கியதன் பின்னர் பைனஸ் மற்றும் கருங்காலி தளபாடங்களை எதிர்காலத்தில் ஏற்றுமதி செய்வதற்கு எதிர்பார்க்கின்றது.

பைனஸ் அரிமரங்களிலுள்ள மர இயல்புகளை சிறந்த முறையில் அவதானித்து அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் பைனஸ் உற்பத்திக்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தையை விருத்தி செய்வதற்கான கவனத்தைச் செலுத்திக் கொண்டிருக்கின்றது. உற்பத்திப் பெறுமதியைச் சேர்த்த தயாரிப்புக்களை பல்வகைப்படுத்துவதன் மூலம் முதலீட்டினை அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கின்றது. எதிர்கால இலக்குகள் பெரும்பாலும் மையப்படுத்தப்படுவது தளபாடக் கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதன் மூலம் வருமானத்தைக் கூட்டுவதாகும். பைனஸ் உள்ளிட்ட அரிமரப் பாவனை சமூகத்தில் பரவுதல், அரிமரப் பாவனையின் மூலம் சூழல் பாதுகாப்பு நோக்கினை உற்சாகமூட்டுதல் எமது இலக்கொன்றாக உள்ள சிறந்த தோற்றத்துடன் தளபாடங்களின் தரத்தினை கூட்டுவதற்காக அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தினால் அறுவடை செய்யப்படும் செயற்பாடுகள்,

பதனிடுதல் மற்றும் பாதுகாப்புச் செயன்முறைகள் போன்றே அரிமரங்களைத் தரப்படுத்தும் செயன்முறைகளிலும் கூடிய கவனத்தைச் செலுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக பிங்கர் ஜொயின்ட் அலகினை அபிவிருத்தி செய்ய வேண்டும். அதிகமான வாடிக்கையாளர்கள் இப்பொருட்களுக்கு விருப்பம் காட்டுவதனால் இத்தயாரிப்புக்களை எதிர்காலத்தில் ஏற்றுமதி செய்வதற்கு முயற்சி செய்கின்றது. கெப்பெடிபொல மற்றும் அம்பாறை தளபாடத் தொழிற்சாலைகளுக்குப் போன்றே சகல தளபாட உற்பத்திகள் மற்றும் பிங்கர் ஜொயின்ட்டுக்கான சான்றிதழ்களை எதிர்வரும் ஆண்டில் பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கின்றது. ISO 9001: 2015 தரங்களைப் பெற்றுக் கொள்வதுடன் அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் செயற்பாட்டுத் திட்டம் மாறுபடும் சந்தை நிலைமைகளுக்கு ஏற்ப அமையும்.

நன்றியைத் தெரிவித்தல்

பணிப்பாளர் சபையின் வழிகாட்டலின்றி இவ்வெற்றியைப் பெற்றுக் கொள்வதற்கு எம்மால் இலகுவாக அமையாது என்பதனை நான் ஏற்றுக் கொள்கின்றேன். அதனால் இவ்வெற்றியைத் தக்க வைத்துக் கொள்வதற்கு தலைவர், பணிப்பாளர் சபை, முகாமைத்துவம் மற்றும் பணியாற்றும் பணிக்குழுவினரால் வழங்கப்படும் ஒத்துழைப்புக்கு எனது நன்றிகளை முதலில் தெரிவிக்கின்றேன். சிரமங்களுக்கு மத்தியிலும் எம்முடன் தொடர்பு கொண்ட எமது கௌரவமான வாடிக்கையாளர்களுக்கு எனது உயர்ந்த நன்றியை இதன் மூலம் தெரிவிக்கின்றேன். அரிமரம் சார்ந்த உற்பத்திகளுக்காக அவர்களின் பிரதான பிரதிநிதி ஆகியமை பற்றி நாம் பெருமையடைவதோடு எமது திறமையினால் உயர்ந்தபட்சம் அவர்களுக்கு சிறப்பான பொருட்களை வழங்குவதனால் அவர்களுக்கு உதவி செய்வதற்கு நாம் எப்பொதும் ஆயத்தமாக உள்ளோம். இறுதியாக நான் வனஜீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சின் கௌரவ அமைச்சர் அவர்களுக்கும், எமது அமைச்சின் செயலாளர் அவர்களுக்கும் பணிக் குழுவினருக்கும், “வன பாதுகாப்பு நாயகம் மற்றும் வன பாதுகாப்பு திணைக்களத்தின் பணிக்குழுவினருக்கும் அவர்களின் குறைவற்ற ஆதரவுக்கும் ஒத்துழைப்புக்குமான எனது உண்மையான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதற்கு விரும்புகின்றேன். அவர்களின் வழிகாட்டல்கள் மற்றும் அறிவு மிக்க அறிவுறுத்தல்களுக்கு அவர்களின் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதற்கு இதனை சந்தர்ப்பமாக்கிக் கொள்வதற்கு விரும்புகின்றேன். அரசாங்க மரக் கூட்டுத்தாபன குடும்பத்துக்கு, அவர்களின் தைரியம், நிறுவனத்தின் மீதான உணர்வு புதியதென வருத்தங்களைப் பாராது பணியாற்றுவதனால் நாடு பூராகவுமுள்ள எமது சமூகத்துக்கு தொடர்ச்சியாக சேவையாற்றுவதற்க்கு எம்மால் முடிந்தமை பற்றி எனது மிகுந்த பாராட்டுகளை அரிமரக் குடும்பத்தினருக்கு சமர்ப்பிக்கிறேன். இறுதியாக அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் மீது நம்பிக்கை வைத்தமைக்காக எமது மதிப்பு மிக்க வாடிக்கையாளர்களை எப்போதும் மதிக்கின்றேன்.

கலாநிதி என்.டீ. ருவண்பதிரண

பொது முகாமையாளர்/ பிரதான நிறைவேற்று அதிகாரி

அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்

எமது பொறுப்புக்கள்

- காடுகளிலிருந்து மரங்களை வெட்டி அகற்றுதல், அம்மரங்களை அரிமரங்களாகவும் முடிவுப் பொருட்களாகவும் மாற்றுதல், மரக் குற்றிகள் , அரிமரங்கள், முடிவுப் பொருட்களை விற்பனை செய்தல் மற்றும் இப்பணிகளுக்கான காட்டுப் பாதைகளை அமைத்தல்.

- மரக் குற்றிகளாக்கும் அலகுகள், அரியும் ஆலைகள், எண்ணெய் இடுதல் மற்றும் பாதுகாத்தல், பொறித்தொகுதிகள், அரிமரங்களை உலர வைத்தல் மற்றும் உலர வைக்கும் சூளைகள் மற்றும் தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்தல், அமைத்தல், செயற்படுத்தல்.

- அரிமர விற்பனை நிலையங்களை நடத்திச் செல்லுதல்.

- அரிமர உபபொருட்களை உற்பத்தி செய்தல் மற்றும் சந்தைப்படுத்தல்

- அரிமரங்களை இறக்குமதி செய்தல்

- புதிய காடுகளை நடும் செயற்றிட்டங்களை ஆரம்பித்தல், மீள் நடுகை மேற்கொள்ளல், காடு மற்றும் காட்டு நடுகைகளை விஞ்ஞான ரீதியாக முகாமைத்துவம் செய்தல்

- விவசாய உற்பத்திகள்

- அரிமரம் தொடர்பான முடிவுப் பொருட்கள் மற்றும் பகுதியளவு முடிவுப் பொருட்கள் உற்பத்திகளை ஏற்றுமதி செய்தல்

- தனியார்க் காணிகளிலிருந்து மரங்களைக் கொள்வனவு செய்தல்

- காடு சார்ந்த உற்பத்திகளைப் பதனஞ் செய்தல்

- பிரம்புகளை இறக்குமதி செய்தல்

- மாதிரிகளைப் பரீட்சிப்பதன் மூலம் உள்நாட்டு மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட அரிமரங்களை இனங்காணல் மற்றும் அரிமரச் சான்றிதழ்களை வழங்குதல்

- அரிமரக் கைத்தொழில் சார்ந்த விடயங்கள் பற்றிய பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்துதல், சான்றிதழ்களை வழங்குதல், சுற்றாடல் தொடர்பான அறிவுறுத்தல் நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்தல்

- கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான காணிகள் மற்றும் கட்டடங்களின் முழுப் பயனையும் பெற்றுக் கொள்வதற்காகத் திட்டமிடல் மற்றும் அதற்காக முதலீடு செய்தல்

எமது வர்த்தகப் பெறுமானங்கள்

- சூழல் நேயம் மிகுந்த மற்றும் வர்த்தக ரீதியாக வெற்றிகரமாகச் செயற்படக் கூடிய பொதுத்துறை நிறுவனமொன்றாக எமது நிலைப்பாட்டைப் பேணுவது எமது முதன்மையான பொறுப்பு என இனங் கண்டுள்ளோம்.

- சுத்தமான மற்றும் ஆரோக்கியமான சூழலைப் பாதுகாப்பதற்கு காடுகள் மற்றும் அரிமரங்களை அகற்றும் விஞ்ஞான ரீதியான முகாமைத்துவம் தொடர்பான அனைத்து நியதிச் சட்ட ஒழுங்குவிதிகளுக்கு அமைய அவற்றை நிறைவேற்றுவதற்கு நாம் கடமைப்பட்டுள்ளோம்.

- எமது வாடிக்கையாளர்களுடன் நேர்மையான வர்த்தகத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டு, அவர்களுக்கும் அனைத்து இலங்கையர்களுக்கும் பெறுமதிகளை உருவாக்குதல் எமது நிலைப்பாட்டின் முதன்மைக் காரணிகள் என நாம் ஏற்றுக் கொண்டுள்ளோம்.

- திறன்களின் வளர்ச்சி, தொழில் அபிவிருத்தி, தொடர்ச்சியான கல்வி மற்றும் பயிற்சி ஆகியவற்றால் எமது ஊழியர்களின் வினைத்திறன் மட்டத்தை மேம்படுத்துவதற்குச் செயற்படுகின்றோம்.

- வாடிக்கையாளர்களுக்கு வினைத்திறன் மற்றும் நேர்மையான சேவையை வழங்குவதற்கு எமது எல்லா அலுவலகங்களிலும் அவர்களை முதன்மைப்படுத்தி செயற்படுகின்றோம்.

- அனைத்து செயற்பாடுகளின் போதும் மற்றும் சேவைகளை வழங்கும் போதும் தனிப்பட்ட விசுவாசத்தினை உயர் மட்டத்தில் பேணுவதாக உறுதிப்படுத்துகின்றோம்.

- எதிர்கால சந்ததியினரின் பெறுமதிமிக்க தேசிய மரபுரிமைகளான சூழல் மற்றும் வன வளங்களைப் பாதுகாத்தலும் விருத்தி செய்தலும் தொடர்பான அனைத்து நியதிச்சட்ட ஒழுங்குவிதிகளையும் சமூக விழுமியங்களையும் பின்பற்றுகின்றோம்.

பணிப்பாளர் சபை – 2022

- **திரு. எஸ். எம். கருணாரத்ன**
  தலைவர்
  அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்

- **கலாநிதி.கே. எம். ஏ. பண்டார**
  பணிப்பாளர்
  வன பாதுகாப்பாளர் நாயகம்

- **திருமதி. எஸ். ஏ. சீ. குலதிலக்க**
  பணிப்பாளர்
  திறைசேறியின் பிரதிநிதி

- **திரு. பீ. டீ. பண்டார திஸாநாயக்க**
  பணிப்பாளர்

- **திரு. எம். ஆர். அஜித் குமார பண்டார**
  பணிப்பாளர்

- **திரு. பீ. டீ. பீ. பஸ்நாயக்க**
  பணிப்பாளர்

- **திரு. டீ. ஜீ. எஸ். தஸநாயக்க**
  பணிப்பாளர்

- **திருமதி.கே. ஐ. டீ. பீ. காரியவசம்**
  பணிப்பாளர் சபையின் செயலாளர்



சிரேஷ்ட முகாமைத்துவக் குழு – 2022

திரு. ஜீ. டீ. எஸ். குமாரசிங்ஹ
பிரதி பொது முகாமையாளர் (நிதி)

திரு. எம். ஏ. சீ. என் . சமரசிங்ஹ
பிரதி பொது முகாமையாளர்
(மனித வளங்கள் மற்றும் நிர்வாகம்)

திரு. எம். சீ. தேவேந்திர
பிரதி பொது முகாமையாளர்
(செயற்பாடு)

திரு. டபிள்யூ. பீ. சமந்த
பிரதி பொது முகாமையாளர்
(சந்தைப்படுத்தல்)

திரு. ஜீ. ஜீ. திஸர கமகே
பிரதி பொது முகாமையாளர்
(பொறியியல் மற்றும் உற்பத்தி) (பதில்)



2022ஆம் ஆண்டிற்கான பணிப்பாளர் சபையின் மீளாய்வு

அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் 2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த நிதியாண்டிற்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களையும் எமது ஆண்டறிக்கையையும் முன்வைப்பதில் பணிப்பாளர் சபையாக நாம் மகிழ்ச்சியடைகின்றோம்.

அறிமுகம்

அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் 1957 இலக்கம் 49 உடைய அரச கைத்தொழில் கூட்டுத்தாபன சட்டத்தின் கீழ், 1968 ஏப்ரல் மாதத்தில்கூட்டுத்தாபனமொன்றாக நிறுவப்பட்டது. அரச மரக் கூட்டுத்தாபனம் 1968 இல் இலக்கம் 49 உடைய அரச ாங்க கைத்தொழில் கூட்டுத்தாபன சட்டத்தின் ஒழுங்குவிதிகளின் கீழ்நிறுவப்பட்ட அரச நிறுவனமொன்றாக நிறுவப்பட்டது. அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் பிரதான அலுவலகம் “சம்பத்பாய” பத்தரமுல்லவில் அமைந்துள்ளதோடு, பிரதேச அலுவலகங்கள் நாடு பூராகவும் அமைந்துள்ளன.

முதன்மைச் செயற்பாடுகள்

அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் முதன்மையாக தமது வருமானத்தை அரிமரம் மற்றும் மரத்திலான உற்பத்திகளை விற்பனை செய்வதன் மூலம் தனது வருமானத்தை ஈட்டுகிறது.

வர்த்தக மீளாய்வு

அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் சிறந்த தரத்திலானதும் வெளிப்படையாகத் தோன்றுவதுமான குழுக்கள் எனும் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்ட நம்பிக்கை பற்றிய கடந்த காலமொன்று மற்றும் பரம்பரயொன்றுள்ள பிரபலமான பாரியதொன்றாகும். இலங்கையில் சிறந்த தரத்திலானதும் நம்பிக்கையானதுமான அரிமர வழங்குனர்களாக அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் அதன் ஆரம்ப வருடமான 1968 ஆம் ஆண்டிலிருந்தே தமது வியாபாரத்தைக் கட்டியெழுப்பியுள்ளது. அவ்வறே, தமது வியாபாரத்தை நோக்கியதான பாதையை வளமான நிறைவொன்றிற்காக பயணம் செய்யும் பாதையொன்றாகும். புதுமையான அனுபவங்கள், நுகர்வோரை மத்தியதாகக் கொண்ட திட்டங்களை மேலும் வியாபாரத்தின் வெற்றியையும் பெறுமதியையும் உயர்த்துகின்றது.

நிலையற்ற தன்மைகள் மற்றும் சவால்கள் மிகுந்த சூழ்நிலையொன்றிற்குள்ளும், மீளாய்வாண்டில் ஒழுங்கான செயலாற்றுகையினை வழங்கியுள்ளது. அதன் மூலம் கடினமான சந்தர்ப்பங்களிலும் தளராமல் இருப்பதற்கு அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்திடமுள்ள திறன் மற்றும் ஆயத்தம் மிகவும் பிரதிபலிப்பாக உள்ளது. இலங்கை கொவிட் - 19 தொற்றுநோய்க்குள்ளும் முன்னோக்கிப் பயணம் செய்தாலும், நிலையாக இல்லாத கடன், பணவீக்கத்தினால் ரூபாவின் வீழ்ச்சி மற்றும் அந்நியச் செலாவணியின் இருப்புக்களின் குறைபாடுகளைச் சந்தித்து இலங்கையின் பொருளாதாரம் தளம்பியது. அதனால் வெவ்வேறான சமூக மட்டங்களிலும் உள்ள அனைத்து இலங்கையர்களும் முன்னர் இல்லாத கஷ்டங்களுக்கு முகம்கொடுத்தனர். எவ்வாறாயினும், தேசிய பொருளாதாரத்துக்குள்ள சவால்கள் குறுகிய கால மற்றும் மத்திய காலமாக தொடர்ச்சியாக உள்ளன.

பெறுமதியை உயர்த்துவதற்காக செலவுகளை மேம்படுத்தல், தொகுதிகளின் அடிப்படையிலான அபிவிருத்தியில் உயர்ந்நத கவனத்தைச் செலுத்துதல், ஆற்றல்மிக்க முகாமைத்துவம் உட்பட 2021 ஆண்டில் முகம்கொடுக்க வேண்டி ஏற்பட்ட வியாபாரப் பிரச்சினைகளுக்கான தீர்வுகளைத் தேடுவதில் நாம் பெற்றுக்கொண்ட அனுபவங்களையும் அறிவினையும்பயன்படுத்திக் கொண்டதன் மூலம் மீளாய்வுக்காக உட்படுத்தப்பட்ட வருடத்தினுள் உறுதியான செயலாற்றுகையொன்றை அடைந்து கொள்வதற்கு அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்துக்கு முடிந்தது.

நிதிசார் செயலாற்றுகை

பொருளாதார நெருக்கடி வாடிக்கையாளர் நடத்தை அடிப்படையில் எமது சில உற்பத்திப் பொருட்களின் செயற்பாடு தொடர்பில் கருத்திற் கொள்ள வேண்டிய தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தினால் 2022 ஆம் ஆண்டின் வருமானமாக ரூபா 4,743 மில்லியன் ஈட்டியிருந்ததுடன், அது கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது -17% வீழ்ச்சியாகும். அவ்வாறே, கூட்டுத்தாபனத்தினால் 2022 ஆம் ஆண்டிற்காக ஈட்டியுள்ள மொத்த இலாபம் ரூபா 2,291 மில்லியன் ஆவதோடு, அது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது -17% வீழ்ச்சியாகும்.

செயலாற்றுகை	2021	2022
	ரூ. மி	ரூ. மி
விற்பனைப் புரள்வு	5,696	4,743
மொத்த இலாபம்	2,754	2,291
செயற்பாட்டு இலாபம்	1,245	330
செயற்பாடற்ற இலாபம்	251	686
திறைசேரி வரி மற்றும் வருமான வரிக்கு முன்னைய இலாபம்	1,496	1,016







அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தினால் மீளாய்வாண்டில் ரூபா 1,016 மில்லியனை வரி முன்னரான தேறிய இலாபமாக அறிக்கையிடப்பட்டிருந்ததுடன், அது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது -32% இலான அதிகரிப்பொன்றாகும். வேலைவாய்ப்புக்களை வழங்குவதன் மூலம் இலங்கையில் வேலையில்லாமையை மேலும் குறைப்பதற்காக அரசாங்கத்துக்கு உறுதுணையாக அதிகமான வேலைவாய்ப்புக்களை வழங்குதல் மற்றும் சந்தைக்குத் தரமான உற்பத்திகளை வழங்குதல் அரச நிறுவனமொன்றாக அரச மரக் கூட்டுத்தாபனத்தின் பொறுப்பாக நாம் கருதுகின்றோம். 2022 ஆம் ஆண்டில்பொருளாதார வீழ்ச்சியின் கீழும் கூடகூட்டுத்தாபன ஊழியர்களின் தொழில் பாதுகாப்பினைஉறுதிப்படுத்தி ஊழியர் கிரயமாகரூபா 1,776 மில்லியனைச் செலவழித்துள்ளது. 2022 ஆம் ஆண்டில்மொத்த நிரந்தரஊழியர் எண்ணிக்கை 1500 ஆவதோடு, 2021 ஆம் ஆண்டில் 1,606 ஆக இருந்தது.

2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுக்காக சொத்துக்கள் மீதான இலாபம்மற்றும் உரித்து அடிப்படையில் இலாபம் பின்வருமாறு காணப்படுகின்றது.

செயலாற்றல்	சொத்துக்களின் மீதான வருமானம	பங்கு மீதான வருமானம்
	%	%
2022	6.6%	8.3%
2021	13.4%	18.3%

2021 ஆம் ஆண்டின் போது 13.4% வரி கொடுப்பனவு செய்வதற்கு முன்னர் சராசரி சொத்துக்கள் மீதான வருமானம் 2022 ஆம் ஆண்டின் போது 6.6% வரை வீழ்ச்சியடைந்திருந்ததுடன், 2021 ஆம் ஆண்டாகும் போது 18.3% ஆன சராசரி பங்கின் மீதான இலாபம் (ROE) 2022 ஆம் ஆண்டிலும் 8.3% வரை வீழ்ச்சியடைந்திருந்தது. மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட ஆண்டில் அரச வருமானத்திற்கு கூட்டுத்தாபனத்தின் பங்களிப்பு ரூபா 2,387 மில்லியன் ஆக இருந்ததோடு, திறைசேரிக்கு செலுத்திய ரூபா 320 மில்லியன் வரியும் அதில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

உற்பத்தி

செயற்பாட்டு செயன்முறைச் சூழல் நேயமிக்க முறைமைகள் ஊடாக மேற்கொண்டு உயர் உற்பத்தி மட்டத்தினைப் பேணுதல் போன்றே நிறுவனத்தின் நிலைப்பாட்டினை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும், இலாபத்திற்குப் போன்றே

நிறுவனத்தின் உள்ளக மற்றும் வெளி அங்கங்களின் சிறந்த நிலைப்பாட்டிற்கும் இலாபத்திற்கும் முக்கியமானது என்பதனை கூட்டுத்தாபனம் கடுமையாக நம்புகின்றது.

அரசாங்கத்தினால் விதிக்கப்படுகின்ற சட்டங்கள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றிற்கு இணங்கி அவற்றிற்கு இணங்க செயற்படல், முறையான வேலைத்தள வகைப்படுத்தல் பட்டியலைத் தயாரித்தல், விஞ்ஞான முறையில் அரிமரங்களை பாதுகாப்பு முறையான பயன்பாடு, இயந்திர உபகரணங்களின் முறையான ஸ்தாபிப்பும் பராமரிப்பும், ஊழியர் ஆட்சேர்ப்பு மற்றும் அபிவிருத்தி செய்வதில் சரியான செயன்முறையொன்றை ஏற்படுத்துதல், கூட்டுத்தாபனத்தில் குறுங்கால மற்றும் நெடுங்கால குறிக்கோள்களை நிலைபேறான முறையில் நிறைவேற்றுவதற்கு முடியுமாக இருந்தது. உண்மையாகவே அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் இலங்கையில் நிலைபேறான வன முகாமைத்துவத்திற்காக பங்களிப்பை வழங்கும் பிரதான நிறுவனமொன்றாகும்.

- அதற்கு மேலதிகமாக தொழிற்சாலைகளின் போட்டியாளர்களை விட போட்டியுடனான நன்மைகளைப் பெற்றுக் கொள்ள கீழ்க்காணும் உத்திகளை நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் ஆலோசனை செய்துள்ளது.
- வன பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களத்தினால் விடுவிக்கப்படுகின்ற வனச்செய்கை விஞ்ஞான அரிமர பிரித்தெடுப்பிற்காக நடவடிக்கை எடுத்தல்.
- சந்தைக்காக மரக் குற்றிகள், புகையிரத திணைக்களத்துக்காக சிலிப்பர்கள், மின்சார சபைக்காக மின்கம்பங்கள் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களத்துக்காக யானைவேலிக் கம்பங்கள் போன்றே வாடிக்கையாளரின் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக கிழிக்கப்பட்ட அரிமரங்களை உற்பத்தி செய்தல்.
- வணிக பெறுமதிமிக்க அரிமரங்கள் அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனங்களிலிருந்தும் தனியார் காணிகளிலிருந்தும் கொள்வனவு செய்தல்.
- நன்கொடை மற்றும் வனமோசடி அரிமரங்ளைப் பெற்றுக் கொள்ளல்.
- வனச்செய்கை நிகழ்ச்சிகளுக்காக உற்சாகத்துடன் பங்குபற்றுல் (செயலாற்றுதல் மற்றும் பங்குபற்றுதல்)
- புகையிரத சிலிப்பர்களை இறக்குமதி செய்து பெறுமதியை சேர்ப்பதன் பின்னர் மீண்டும் ஏற்றுமதி செய்தல்.

அரச காடுகளிலிருந்து அரிமரங்களை வெட்டுதல்

வன பாதுகாப்புத் திணைக்களத்தினால் விடுவிக்கப்பட்ட முதிர்ந்த வனப் பிரதேசங்களின் அளவு குறைவடைதல் அண்மைக் காலமாக நாம் முகம் கொடுத்து வரும் பிரதான சவாலாகும். வன பாதுகாப்புத் திணைக்களத்தின் மூலம் வருடாந்தம் விடுவிக்கப்பட்ட வனப் பிரதேசங்களின் அளவுதிறைசேறியின் இணக்கப்பாட்டுடன் மேலதிக அளவினை விடுவித்துக் கொள்வதற்கும், அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் மூலம் சில்பர் மற்றும் மின் பரிமாற்றக் கம்பங்களுக்குத் தேவையான அரிமரங்களைப் பெற்றுக் கொள்வதும், இலங்கை புகையிரத மற்றும் காணி புனர்நிர்மாண ஆணைக்குழுவிற்குச் சொந்தமான காணிகளிலிருந்து அரிமரங்களைப் பெற்றுக் கொள்வதற்கும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வன பாதுகாப்புத் திணைக்களத்தினால் வன முகாமைத்துவ திட்டத்தின் பிரகாரம் வெட்டுவதற்காக தேக்கு, பைனஸ், யூக்கலிப்டஸ் போன்ற காட்டு மரங்கள் விடுவிக்கப்பட்டுள்ளதோடு 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் மரங்களை வெட்டுவதற்கு விடுவிக்கப்பட்டுள்ள ஹெக்டயார் அளவுகள் கீழே உள்ளவாறு ஆகும்.

மர இனம்	முற்றாக வெட்டுதல் (ஹெக்டயார்)		மெல்லியதாக்குதல் (ஹெக்டயார்)	
	2021	**2022**	**2021**	**2022**
தேக்கு	541	450	490	300
யூக்கலிப்டஸ்	160	100.4	238	110
பைனஸ்	265	47.53	-	-
காயா	-	-	244	181
எக்கேஷியா	35	18.4	-	-

அரிமரங்களாக மாற்றீடு செய்தல்

2021 ஆம் ஆண்டின் அரிமர உற்பத்தி 3924 கன மீற்றருக்கு ஒப்பாக 2022 ஆம்

ஆண்டினுள் கிழிக்கப்பட்ட 3,432 கன மீற்றர் பலகை ஆலைகளிலிருந்து உற்பத்தி செய்யப்பட்டுள்ளதுடன், 3,441 கன மீற்றர் நாடு பூராகவும் அமைந்துள்ள விற்பனைக் களஞ்சியங்கள் மூலம் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

மின் கம்பங்கள் மற்றும் சிலிப்பர் கட்டைகளைப் பாதுகாத்தல்

2022 ஆம் ஆண்டினுள் 34,113 சிலிப்பர்கள் மற்றும் 10,448 யானைவேலிக் கம்பங்கள் அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் அம்பாறை, கல்தெமுல்ல, மற்றும் பூஸ்ஸ பாதுகாப்பு நிலையங்களில் பாதுகாக்கப்பட்டுள்ளன. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் சிலிப்பர் உற்பத்தி 17.4% இனால் அதிகரித்துச் சென்றுள்ளது.

தளபாட உற்பத்தி

அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் அம்பாறை, கல்தெமுல்ல மற்றும் பூஸ்ஸ ஆகிய தளபாட உற்பத்தி நிலையங்களிலிருந்து 292 ரூபா மில்லியன் பெறுமதியுள்ள தளபாடங்கள் கவனத்தில் எடுக்கப்பட்டுள்ள ஆண்டினுள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. அவற்றுள் 428 ரூபா மில்லியன் (வரியுடன்) ஆன பெறுமதியுடைய தளபாடங்கள் அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் இரத்மலானை, கண்டி, இரத்தினபுரி, தலல்ல, பூஸ்ஸ, அம்பாறை, பண்டாரவளை மற்றும் பத்தரமுல்லை தளபாட காட்சியறைகளிலிருந்து விற்பனை செய்யப்பட்டுள்ளன.

2021 – 2022 ஆம் ஆண்டுகளில் உற்பத்தி, விற்பனை மற்றும் வருமானம்

இலக்குகள் மற்றும் அடைவுகளை மீளாய்வு செய்தல்மற்றும் கண்காணித்தல்

அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவக் குழுவின் மூலம் நாளாந்த செயற்பாட்டு நடவடிக்கைகள் வருட ஆரம்பத்தில் அமைக்கப்பட்ட நோக்கங்களுக்கு அமைவானதாகும் என்பதனை உறுதிப்படுத்துவதற்காகவும் நோக்கங்கள் மற்றும் இலக்குகளை வருட இறுதியில் அடைந்து கொள்வதனை உறுதிப்படுத்துவதற்கும் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. அதனடிப்படையில் முன்னேற்றத்தினைக் கண்காணித்தல் உள்ளிட்ட ஒவ்வொரு பிரிவுடனும் தொடர்பாக தற்போது உள்ள மற்றும் ஏற்படக்கூடிய அனைத்துப் பிரச்சினைகளையும் தீர்ப்பதற்காக தலைவரின் தலைமையில் சகல பிரதேச முகாமையாளர்கள் மற்றும் கூட்ட,த்தாபனத்தின் சிரேஷ்ட முகாமையாளர்களின் பங்குபற்றுதலுடன் மாதாந்த பிரதேச முகாமையாளர்களின் கூட்டமொன்று அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவத்தின் மூலம் நடாத்தப்படுகின்றது.

நிலையாக இல்லாத கடன், அந்நியச் செலாவணியின் குறைபாடு, பணவீக்கம், உயர் வட்டி வீதம் மற்றும் பணத்தின் மதிப்பிழப்பு காரணமாக இலங்கையின் செயற்பாட்டுச் சூழல் இன்னும் அழுத்தத்துக்கு உள்ளாவதோடு அதன் மூலம் குடிமக்களுக்கும் நிறுவனங்களுக்கும் கடும் சவால்களுக்கு முகம்கொடுக்க நேர்ந்தது. இவ்வாறான பின்னணியின் கீழ், நோக்கங்களின் மீதும் நிதி ஸ்திரத்தன்மையின் அடிப்படையில்

		உற்பத்தி அளவு		விற்பனை அளவு		மொத்த வருமானம்	
		2021	2022	2021	2022	2021 (ரூ. மி)	2022 (ரூ. மி)
குற்றிகள்	M3	127,698	103,121	141,556	102,491	4,929	3624
மரத்துண்டங்கள்	M3	3924	3,432	3137	3,441	309	373
சிலிப்பர் கட்டைகள்	No.	29,049	34,113	29,002	30,969	287	603
மின்கம்பங்கள்	No.	2,624	1,837	2,729	2,312	30	34
யானைவேலிக் கம்பங்கள்	No.	11,913	10,448	17,412	11,219	104	71
சுற்றுக் கம்பங்கள்	No.	97,846	78,528	101,880	82,602	12	12
விறகு	M3.	86,971	93,785	70,075	75,710	49	69
வேலிக் கம்பங்கள்	No.	151,893	84,911	164,913	80,985	22	13
தளபாடங்கள்	Mn	389	292	-	-	390	428

வெளிச் சூழலில் நிகழும் மாற்றங்களுக்கு பதிலளிப்பதற்கு முயற்சி எடுப்பதோடு, அரிமரச் சந்தையில் அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்துக்கு உள்ள முதலிடத்தை மேலும் உறுதிப்படுத்திக் கொள்வதற்காக கவனத்தைச் செலுத்தியுள்ளது. இதற்கிடையில், எமது சமூகத்திலான எமது பொறுப்புக்களை நாம் புரிந்து கொண்டுள்ளதோடு, எமது வாடிக்கையாளர்களுக்கு உயர்ந்த பெறுமதிகளை வழங்கி அவர்களுடன் முன் நோக்கிச் செல்வதற்காக உள்ளதைத் தொடர்ந்தும் பணியாற்றுவோம்.

பணிப்பாளர் குழு சார்பாக,
எம். எஸ். கருணாரத்ன
தலைவர்
அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்

எமது உள்ளடக்க வலயங்கள்
இட வரைபடம் - அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்

Head Office - Battaramulla (A12)

Regional Offices
1 Ampara (G11)
2 Anuradhapura (C07)
3 Bandarawela (E12)
4 Colombo (A13)
5 Jaffna (B02)
6 Kurunegala (C10)
7 Kandy (D11)
8 Matara (C16)
9 Monaragala (F12)
10 Nuwara Eliya (D12)
11 Polonnaruwa (E08)
12 Rathnapura (C13)
13 Boossa (B15)
14 Keppetipola (D12)
15 Kaldemulla (A13)

Depots (Sales Centers)

Ampara Region
1 Ampara Depot (G11)
2 Padiyathalawa Depot (F11)
3 Batticaloa Depot (G09)

Anuradhapura Region
4 Anuradapura Depot (C07)
5 Medawachchiya Depot (C06)
6 Talawa Depot (C07)
7 Vauniya Depot (C05)

Bandarawela Region
8 Boralanda Depot (E13)

Colombo Region
9 Kadawatha Depot (A12)
10 Mirigama Depot (B11)
11 Willorawatta Depot (A13)
12 Kaldemulla Depot (A13)
13 Egodauyana Depot (A13)
14 Moratumulla Depot (A13)
15 Pannipitiya Depot (A12)
16 Ratmalana Depot (A13)

Jaffna Region
17 Kilinochchi Depot (C03)
18 Oddusudan Depot (D04)
19 Nallur Depot (B02)
20 Jaffna Depot (B02)

Kurunegala Region
21 Kankaniyamulla Depot (B10)
22 Kurunegala Depot (C10)
23 Nikaweratiya Depot (B09)
24 Melsiripura Depot (C10)
25 Puttlam Depot (A08)
26 Bingiriya Depot (A10)
27 Nainamadama Depot (A11)

Kandy Region
28 Pallekelle Depot (D11)
29 Matale Depot (D10)
30 Nelundeniya Depot (B11)
31 Ethgala Depot (C11)
32 Dambuluoya Depot (D09)
33 Naula (Medapihilla) Depot (D09)

Matara Region
34 Hambantota Depot (E15)
35 Unawatuna Depot (B15)
36 Ambalangoda Depot (B15)
37 Talalla Depot (D16)

Monaragala Region



38 Kumbukana Depot (F13)
39 Wellawaya Depot (E13)

Nuwara Eliya Region

40 Nuwara Eliya Depot (D12)
41 Kitulgala Depot (C12)
42 Harasbedda Depot (D12)

Polonnaruwa Region

43 Kaduruwella Depot (E08)
44 Wilankulama (Trincomalee) (E06)
45 Minneriya Depot (E08)

Rathnapura Region

46 Dela Depot (C13)
47 Beruwala Depot (A14)
48 Timbolketiya Depot (D14)
49 Matugama Depot (B14)

Boossa Region

50 Boosa Depot (B15)

Keppetipola Region

51 Keppitipola Depot (D12)

Furniture Showrooms

1 Head Office - Battaramulla (A12)
2 Rathmalana (A13)
3 Boossa (B15)
4 Pallekele (D11)
5 Ampara (G11)
6 Rathnapura (C13)
7 Talalla (D16)

Furniture Factories

1 Ampara (G11)
2 Kaldemulla (A13)
3 Boossa (B15)

Circuit Bungalows

1 Nuwara Eliya - Kandapola (D12)
2 Nuwara Eliya - Kandapola (New) (D12)
3 Timbolketiya (D14)
4 Sella Kataragama (F14)

Training Centers

1 Kaldemulla - TTTI (A13)
2 Head Office - IT (A12)

Laboratories

1 Head Office (A12)

Mechanical Workshops

1 Kaldemulla (A13)
2 Boralanda (E13)
3 Keppetipola (D12)

Sawmills

1 Kaldemulla (A13)
2 Boossa (B15)
3 Ampara (G11)
4 Keppetipola (D12)
5 Talalla (D16)
6 Ethgala (C11)
7 Dela (C13)
8 Melsiripura (C10)

Seasoning and Impregnation Plant

1 Kaldemulla (A13)
2 Boossa (B15)
3 Keppetipola (D12)



கூட்டுத்தாபன நிர்வாகம்

அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தினுள் கூட்டுத்தாபன நிர்வாகத்தில் (Corporate governance) உயர் தரத்தில் நடத்திச் செல்வதற்கு பணிப்பாளர் சபை அர்ப்பணிப்போடு செயற்படுவதுடன், அதன் பொறுப்பு பணிப்பாளர் சபையினால் ஏற்கப்பட்டுள்ளது.

பங்குதாரர்களின் பொறுப்புக்களில் கவனத்தைச் செலுத்தியுள்ளது என்பதனை உறுதிப்படுத்துவதற்காக அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தினுள் கூட்டுத்தாபன நிர்வாகக் கொள்கை மற்றும் பாவனைகள் திட்டமிடப்பட்டுள்ளதோடு, அதன் மூலம் நிறுவன ஊழியர்கள், வாடிக்கையாளர்கள், வழங்குனர்கள், நுகர்வோர்கள் மற்றும் அது செயற்படுத்தப்படுகின்ற அனைத்து சமூகங்களும் உட்பட அங்குள்ள அனைத்து பங்குதாரர்களின் தேவைகளும் இனங்காணப்பட்டன. இக்கட்டுரையின் மூலம் பணிப்பாளர் சபையினால் பின்பற்றப்படுகின்ற கூட்டுத்தாபன நிர்வாகக் கொள்கைகள், பாவனைகள் மற்றும் செயன்பாடுகள் பற்றித் தெளிவுபடுத்தப்படுகின்றது.

பணிப்பாளர் சபையும் அதன் செயற்பாடுகளும்

பணிப்பாளர் சபையின் மூலம் கூட்டுத்தாபனம் நிர்வகிப்பதோடு, கூட்டுத்தாபனத்தின் வியாபார நடவடிக்கைகளை செயற்படுத்துவதும் கண்காணிப்பும் செய்யப்படுகின்றது. பணிப்பாளர் சபையின் பணிப்பாளர்கள் ஏழு பேரைக் கொண்டுள்ளதோடு, அதில் பணிப்பாளர்கள் ஐந்து பேர் வரி அமைச்சின் அமைச்சர் அவர்களினால் நியமிக்கப்படுவதோடு, பணிப்பாளர்கள் இருவர் உத்தியோகபூர்வமாக நியமிக்கப்படுவர். பணிப்பாளர் சபையின் சுவாதீனத்தன்மை மற்றும் விசேட அறிவு உத்தியோகபூர்வமாக நியமிக்கப்பட்ட பணிப்பாளர்களில் ஒரு பணிப்பாளர் நிதி அமைச்சினால் நியமிக்கப்படுவர்.

ஒவ்வொரு கூட்டத்துக்கு முன்னரும், முடிவுகளை செயற்படுத்துவதற்காக பணிப்பாளர்களுக்கு உரிய அனைத்து முகாமைத்துவ தகவல்களும் பின்னணித் தகவல்களும் வழங்கப்படுகின்றது. கூட்டுத்தாபனத்தின் செயலாற்றுகை, புதிய முதலீடு, மூலதன கருத்திட்டம், உரிய சபையின் அனுமதி தேவையான வேறு பிரச்சினைகள் பற்றிய சபை பத்திரம் கூட்டத்துக்கு முன்னர் முன்வைக்கப்படுகின்றது.

கூட்டுத்தாபனத்தின் ஏனைய பணிப்பாளர்கள் மற்றும் வெளிக்கள பங்குதாரர்களுடன் தொடர்ந்து தொடர்புகளைப் பேணுதல், கொள்கைகள் பற்றிய விடயங்கள் தொர்பாக தலைவர் பொறுப்புக் கூற வேண்டும். மேலும் கூட்டுத்தாபனத்தின் மொத்த வணிகம், செயற்பாடுகள் மற்றும் மூலோபாய அபிவிருத்தியின் சகல பிரிவுகளுக்கும் அவர் பொறுப்புக் கூற வேண்டியுள்ளதோடு, அதற்காக ஏனைய பணிப்பாளர்களினதும் மேல் முகாமைத்துவத்தின் ஒத்துழைப் கிடைக்கும். பணிப்பாளர் சபை கூட்டங்களில் தமது பிரிவுக்குரிய விடயங்கள் கலந்துரையாடப்படும் போது மேல் முகாமைத்துவத்தின் உறுப்பினர்கள் கூட்டத்தின் இடையில் உரிய சந்தர்ப்பத்தில் முன் நிற்பர்.

பணிப்பாளர் சபையின் பிரதான பணிகள்

- கூட்டுத்தாபனத்தின் வியாபார மற்றும் நடவடிக்கைகளை செயற்படுத்தல்.
- கூட்டுத்தாபனத்தின் செயற்பாட்டுத் திட்டமிடலுக்காக அடிப்படையொன்றாக குறுகிய கால மற்றும் நீண்ட கால வழிமுறைகளைத் தயாரித்தல் மற்றும் செயற்படுத்தலைக் கண்காணித்தல்
- வியாபாரத்தின் பிரதான இடர்களை இனங்காணல் மற்றும் போதுமான இடர் முகாமைத்துவ அமைப்பு செயற்படுகின்றது என உறுதிப்படுத்தல்.
- உள்ளக நிர்வாகங்களில் போதுமான மற்றும் வினைத்திறன் என உறுதிப்படுத்தல்.

- வருடாந்த மூலதன மற்றும் செயற்பாட்டு வரவு செலவுத் திட்டத்தை அனுமதித்தல் மற்றும் வரவு செலவுத் திட்டத்துக்கு எதிராக செயலாற்றுகையை மீளாய்வு செய்தல்
- கூட்டுத்தாபனத்தின் இறுதி நிதிக் கூற்றை அனுமதித்தல்
- சட்டம் மற்றும் விதிமுறைகளின் பிரகாரம் உறுதிப்படுத்தல்
- அனைத்து உடன்படிக்கைகள், கையகப்படுத்தல்கள் அல்லது சொத்துக்களை அகற்றுதல் மற்றும் மூலதன கருத்திட்டங்களை அனுமதித்தல்

திறைசேறியிலிருந்து நியமிக்கப்பட்ட பணிப்பாளர் கூட்டுத்தாபனத்துடன் நேரடியான அல்லது மறைமுகமான பொருட் தொடர்பொன்று இன்றி சுயாதீனமாவதோடு, அப்பணிப்பாளரிடமுள்ள பரந்த அளவிலான விசேட அறிவு மற்றும் வணிக நிறுவன மற்றும் நிதிச் செயற்பாடுகள் பற்றிய கவனிக்கப்பட வேண்டிய அனுபவங்கள் பணிப்பாளர் சபைக்கு சுயாதீனமானதும் நோக்கு மற்றும் தீர்வினைக் கொண்டு வரும்.

பணிப்பாளர் சபையின் உப குழு

அனைத்து உப குழுக்களையும் நிறுவுதல் மற்றும் செயற்படுத்தல், இக்குழுக்களுக்காக உறுப்பினர்களை நியமிப்பதற்காக பணிப்பாளர் சபை பொறுப்புக் கூற வேண்டியுள்ளதோடு, பணிப்பாளர் சபையினால் அவ்வுப குழுக்களுக்காக பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

கணக்காய்வுக் குழு

கணக்காய்வுக் குழுப் பணிப்பாளர்கள் மூவரினைக் கொண்டுள்ளதோடு, அப்பணிப்பாளர்கள் திருமதி எஸ். ஏ. சீ. குலதிலக-தலைவர், கலாநிதி கே. எம். ஏ. பண்டார-உறுப்பினர்மற்றும் திரு. பீ. டீ. பண்டார திஸாநாயக்க - உறுப்பினர்ஆவர். அனைத்து பிரதி முகாமையாளர்கள் மற்றும் பிரத்தானிகள் தேவையான சந்தர்ப்பங்களில் கணக்காய்வுக் குழுக் கூட்டங்களில் கலந்து கொள்வர். பக்க இல 35 - 37 இல் கணக்காய்வு குழு அறிக்கை, நிதியாண்டினுள் குழுவினால் மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகள் தெளிவுபடுத்தப்படுகின்றன.

உள்ளக நிர்வாகம்

கூட்டுத்தாபனத்தின் சொத்துக்களைப் பாதுகாப்பதற்காக வினைத்திறனுள்ள உள்ளக நிர்வாக அமைப்பொன்றை நிறுவுதல் மற்றும் நம்பிக்கையான தகவல்கள் உருவாக்கப்படுகின்ற, சரியான மற்றும் முழுமையான அறிக்கையை நடத்திச் செல்வதனை உறுதிப்படுத்துவதற்கான பொறுப்பினை பணிப்பாளர் சபை வகிக்கின்றது. இவ்வமைப்புக்கு நிதி, செயற்பாட்டு மற்றும் இடர் முகாமைத்துவம் உட்பட னைத்து நிர்வாகமும் உள்ளடக்கப்படுவதோடு, இடர் முகாமைத்துவத்துக்காக கூட்டுத்தாபனத்தினால் பின்பற்றப்பட்ட உத்திகள் பக்க இல 38 இருந்து 42 வரை இடர் முகாமைத்துவம் பற்றிய அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

05 வருட காலப் பகுதியை உள்ளடக்குமாறான வழிமுறைகளுக்கு மேலதிகமாக, ஒவ்வொரு நிதியாண்டின் ஆரம்பத்திலும் விரிவான வரவு செலவுத்திட்ட செயன்முறையொன்று நடைமுறைப்படுத்தப்படுகின்றது. வருடாந்த வரவு செலவுத்திட்டம், தீர்மானமான வெற்றியின் முக்கிய காரணிகளை இனங்காண்பதன் மூலம் சகல பிரிவினாலும் தயாரிக்கப்பட்ட செயற்பாட்டு நோக்கங்கள், சபையினால் அனுமதிக்கப்படுவதோடு, ஒவ்வொரு மாதமும் அதன் முன்னேற்றம் பரீட்சிக்கப்படுகின்றது.

கூட்டுத்தாபனத்தின் உள்ளக கணக்காய்வுப் பிரிவினால் உள்ளக நிர்வாக அமைப்பு வழக்கமாக மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படுவதோடு, அதன் தேடல்கள் கணக்காய்வுக் குழுவினால் முதலில் மீளாய்வுக்கு உட்படுத்தப்படுவதோடு, அதன் பின்னர் கவனிக்கப்படத்தக்க பிரச்சினைகள் பணிப்பாளர் சபையிடம் அறிக்கையளிக்கப்படும்.

பணிப்பாளர் சபை தற்போது உள்ள உள்ளக நிர்வாக செயன்முறைகள் மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டதோடு, அதன் செயல்திறன் பற்றி திருப்தியடையும்.

பங்குதாரர்களுடனான தொடர்பு

பணிப்பாளர் சபை கூட்டுத்தாபனத்தின் பிரதான பங்குதாரர்களுடன் சிறந்த உறவொன்றைப் பேணிச் செல்வதிலுள்ள முக்கியத்துவத்தை இனங்கண்டுள்ளதோடு, முழு கூட்டுத்தாபனத்திற்குள்ளும் இதனை ஏற்படுத்துவதை உறுதிப்படுத்துகின்றது. கூட்டுத்தாபனத்தினுள் உள்ளக தொடர்பாடல் பிரதானமாக மின்னஞ்சல், நிருபங்கள் மற்றும் சுற்றறிக்கைகள் ஊடாக இடம்பெறும்.

கூட்டுத்தாபனத்தின் கொள்கைகள் மற்றும் பயன்பாடுகள் கூட்டுத்தாபனத்தின் பெறுமதிகள் மற்றும் அதன் சமூகப் பொறுப்புக்களின் பிரகாரம் என பணிப்பாளர் சபை உறுதிப்படுத்துவதோடு, கூட்டுத்தாபனம் தனது ஊழியர்களின் மற்றும் அமைப்புக்களில் உள்ள ஏனையவர்களின் சூழல், சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு தரத்தை பாதுகாத்தலை விருத்தி செய்கின்றது. உரிய செயன்முறைகள் நிறுவன சமூகப் பொறுப்புக்கள் அறிக்கையில் 43 இருந்து 52 வரை விவரமாகக் காட்டப்பட்டுள்ளது.

இணக்கப்பாடு

அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபையினால் உறுதியான உள்ளக இணக்கப்பாட்டு செயன்முறையிலான கவனிக்கப்பட வேண்டிய முக்கியத்துவத்தை வழங்குவதோடு, இணக்கப்பாட்டினை உறுதிப்படுத்துவதற்காக கூட்டுத்தாபனத்தின் நிதிக் கூற்று இலங்கை கணக்கியல் தரம் (LKAS மற்றும் SLFRS) மற்றும் ஏனைய சட்ட ரீதியான விதிமுறைகளின் வழிமுறைகளுக்கு இணக்கப்பாட்டைத் தயார் செய்துள்ளது.

இருப்பு

கூட்டுத்தாபனத்தின் நிதி நிலைமை மற்றும் பணப் பாய்ச்சல் நிலைமை சரியாக மீளாய்வு செய்வதன் பின்னர் பணிப்பாளர்களினால் நிதிக் கூற்று தயாரிக்கும் போது "Going Concern" அடிப்படையில் தொடர்ச்சியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன, கூட்டுத்தாபனத்தின் எதிர் காலத்திற்காக அதன் செயற்பாட்டினை தொடர்ச்சியாக நடத்திச் செல்வதற்கு போதுமான வளங்கள் உள்ளன என பணிப்பாளர் சபையின் நம்பிக்கையாகும்.

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் அறிக்கை– 2022

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் அமைப்பு

திருமதி எஸ். ஏ. சீ. குலதிலக	-	தலைவர்
கலாநிதி கே. எம். ஏ. பண்டார	-	உறுப்பினர்
திரு. பீ. டீ. பண்டார திஸாநாயக்க	-	உறுப்பினர்

2022 ஆம் ஆண்டின் போது கவனம் செலுத்தப்பட்ட பிரிவு

நிதி அறிக்கையிடல்

உள்ளகக் கணக்காய்வு இடர் மற்றும் கட்டுப்பாடு

வெளிவாரி கணக்காய்வு

இணக்கப்பாடு

குழுவின் நோக்கங்கள்

நிதி அறிக்கையிடல் செயற்பாட்டு மீளாய்வு செய்வதினூடாக பணிப்பாளர் சபையின் கண்காணிப்பு பொறுப்பை நிறைவேற்றுவதற்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கு அடிப்படையாகக் கொண்ட நிதிக் கூற்றுக்களின் சரியானதெனவும் சட்ட ஒழுங்குபடுத்தல் தேவைப்பாட்டிற்கு இணங்குவதை உறுதிப்படுத்துவதற்காக பின்பற்றப்படுகின்ற செயற்பாடு, உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை மற்றும் ஆபத்து முகாமைத்துவச் செயற்பாடு, உள்ளகக் கணக்காய்வுச் செயற்பாடு மற்றும் சகல தரப்பினர்களதும் தேவைப்பாடுகளைப் பாதுகாக்கும் நோக்கில் வெளிவாரிக் கணக்காய்வாளர்களின் சுயாதீனம் மற்றும் செயலாற்றல் மீளாய்வு செய்தல் போன்ற செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காககணக்காய்வு முகாமைத்துவக் குழு தாபிக்கப்பட்டது.

வியாபார சூழலினுள் எழுந்து வருகின்றபுதிய போக்குகளுடன் பயணம் செய்வது மற்றும் குழுவின் பொறுப்புக்களை உரிய நேரத்திலும் உரிய முறையிலும் நிறைவேற்றுவதனை உறுதிப்படுத்துதல் வரை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் பொறுப்புக்கள் மற்றும் கடமைகள் தொடர்ச்சியாகக் காட்டப்படும்.

பிரதான பொறுப்புக்கள்

- நிதி அறிக்கைகளை தயாரித்தல் மற்றும் வழங்கும் போது பின்பற்றப்படுகின்ற கட்டுப்பாடுகளை மீளாய்வு செய்தல் மற்றும் மதிப்பாய்வு செய்தல் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க வெளிப்படுத்தப்பட்டவைகளை போதியளவில் உள்ளதாக உறுதிப்படுத்தல்.
- கூட்டுத்தாபனத்தின் சொத்துக்களைப் பாதுகாத்தலை உறுதிப்படுத்துவதற்காக உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையினதும் இடர் முகாமைத்துவத்தினதும் செயற்பாடுகள் போதியளவிலும் வினைத்திறனாகவும் கண்காணித்தல் மற்றும் மீளாய்வு செய்தல்
- கணக்காய்வுக் குழு அங்கீகரிக்கப்பட்ட மேவுகைத் திட்டத்தை செயற்படுத்துதல் உட்பட உள்ளகக் கணக்காய்வு செயற்பாடுகளை மேற்பார்வை செய்தல்
- வெளிக் கணக்காய்வாளரின் சுயாதீனம் மற்றும் செயலாற்றலை மதிப்பீடு செய்தல்
- வருடாந்த நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வில் எழுந்த கண்டுபிடிப்புக்களை கருத்திற் கொள்ளல்.

- திரட்டிய அறிக்கை, கணக்காய்வு செய்யப்பட்ட வருடாந்த நிதிக் கூற்றுக்கள் மற்றும் இடைக்கால அறிக்கைகளை அங்கீகரிப்பதற்கு சபைக்கு பரிந்துரைத்தல்

2022 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்

கணக்காய்வுக்குழு 2022 ஆம் ஆண்டில் பின்வரும் செயற்பாடுகள் தொடர்பில் கவனம் செலுத்தியது.

- **நிதி அறிக்கை**

  பணிப்பாளர் சபைக்கு பரிந்துரை செய்வதற்கு முன், குழு இறுதியாக கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களை மீளாய்வு செய்து முகாமைத்துவத்துடன் கலந்துரையாடியது.

  நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்காகப் பயன்படுத்தப்படும் தகவல் அமைப்புக்களில் தொடர்புடைய கட்டுப்பாடுகளின் செயல்திறன் மற்றும் ஆபத்து குறித்து குழுவினால் தொடர்ந்து கவனம் செலுத்தப்பட்டது.

  பொருளாதார சீர்கேடு காரணமாக ஏற்பட முடியுமான நிதித் தாக்கத்தை கருத்தில் எடுத்துக் கொண்டு, குழுவினால் தொடர்ந்து வணிகத்தின் இருப்பு பற்றி மதிப்பீடு செய்யப்பட்டது. மேலும் குழுவானது ஆண்டு முழுவதும் அடிக்கடி காசுப்பாய்ச்சல் கூற்றுக்கள் மற்றும் நிதியவழங்கல் மீளாய்வு செய்கின்றது.

- **இணக்கப்பாடு**

  ஒழுங்குபடுத்தல் மற்றும் சட்ட இணக்கப்பாடுகளை மேற்பார்வை செய்வதற்காக முகாமையினால் சமர்ப்பிக்கப்பட்ட சட்ட ரீதியான வரி இணக்கக் கூற்று உட்பட ஒழுங்குபடுத்தல் கூற்று கணக்காய்வுக் குழுவினால் மீளாய்வு செய்யப்பட்டது.

- **உள்ளகக் கணக்காய்வு ஆபத்து மற்றும் கட்டுப்பாடு**

  கூட்டுத்தாபனத்தைப் பாதிக்கும் அனைத்து வகையான குறிப்பிடத்தக்க இடர்களையும் கண்டறிவதோடு குறைப்பதற்கு பயனுள்ள தந்திரோபாய உத்திகள் செயற்படுவதாக முகாமைத்துவத்திடம் இருந்து தேவையான உத்தரவாதங்களைப் பெறுவதில் குழு தொடர்ந்து கவனம் செலுத்தியுள்ளது. இந்த ஆண்டில் ஆபத்துக்களை அடையாளம் காணுதல், மதிப்பீடு செய்தல், குறைத்தல் மற்றும் கட்டுப்பாட்டு பலவீனங்களுக்காக கூட்டுத்தாபனம் பின்பற்றும் பிரதான ஓர் இடர் முகாமைத்துவ செயற்பாடு கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவத்துடன் குழு கலந்துரையாடலை மேற்கொண்டது.

  கூட்டுத்தாபனத்தினுள் உள்ளகக் கட்டுப்பாடுகளின் போதுமானவை எனவும் செயலாற்றல் பற்றி குழு தொடர்ந்து மதிப்பாய்வு செய்தது. நடத்தப்பட்ட உள்ளகக் கணக்காய்வில் புதுப்பித்தல்களும் இதில் அடங்கும். மேலும் இச்செயன்முறையானது கூட்டுத்தாபனத்தின் நிறுவப்பட்ட கொள்கைகள் மற்றும் நடைமுறைகளுக்கு இணங்குவதையும் சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுடன் இணங்குவதும் பற்றிய புதுப்பித்தலையும் உள்ளடக்கியது.

  கூட்டுத்தாபனத்திற்காக உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தை உரிய கால இடைவெளிக்குள் குழுவினால் மீளாய்வு செய்யப்பட்டதோடு, தொழிற்பாட்டுச் சூழலுக்கும் வணிகத் தேவைகளுக்கும் ஏற்றவாறு மாற்றங்களைச் செய்தது.

- **வெளிவாரிக் கணக்காய்வு**

  குழுவானது வெளிவாரிக் கணக்காய்வாளரைத் தொடர்ந்து சந்தித்து அவர்களின் சுதந்திரம் விடயப்பரப்பு மற்றும் செயற்பாடுகளை அவதானித்தது. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினால் வெளிவாரிக்

கணக்காய்வாளருடன் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளதுடன் கணக்காய்வைத் திட்டமிடல் மற்றும் விடயப் பரப்பினைத் திட்டமிடும் கட்டத்தின் போது கணக்காய்வுத் திட்டத்தை மீளாய்வு செய்தல், நிதிக் கூற்றுக்களை அங்கீகரிக்கும் முன்னர் கணக்காய்வினைப் பூர்த்தி செய்தல் தொடர்பாக கணக்காய்வு அறிக்கை மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டினை மேம்படுத்த வேண்டிய பிரிவுகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயத்தின் பிரகாரம் முகாமைத்துவத்தின் கவனம் செலுத்த வேண்டிய ஏனைய விடயங்கள் தொடர்பாக இதன் போது கலந்துரையாடப்பட்டது. மேலும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினால் வெளிவாரிக் கணக்காய்வாளர்களுடன் ஏதேனும் குறிப்பிட்ட விடயங்களை கலந்துரையாடுவதற்காகவும் கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டன. கணக்காய்வுக் குழுவினால் உயர் முகாமைத்துவ தகவலைக் கருத்தில் எடுத்துக் கொண்டு, வெளிவாரிக் கணக்காய்வாளர்களின் செயலாற்றலை மீளாய்வு செய்ததுடன் மீளாய்வு செய்யப்பட்ட பெறுபேறுகள் வெளிவாரிக் கணக்காய்வாளர்களுடனும் முகாமைத்துவம் என்பவற்றுடன் கலந்துரையாடப்பட்டன.

திருமதி எஸ். ஏ. சீ. குலதிலக
தலைவர்
கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

இடர் முகாமைத்துவம்

நிலைபேறான வளர்ச்சிக்காக நிறுவன நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடைந்து கொள்ளும் நிரந்தர செயன் முன்னேற்றமொன்றை அடைந்து கொள்வதற்காக வியாபார மற்றும் நிதி ஆபத்து முகாமைத்துவம் ஆரம்ப ரீதியாக முக்கியமாக உள்ளது. ''ஆபத்தை'' முழுமையாக ''இல்லாமல் ஆக்குவதற்கு''முடியாத சாதகமொன்றாக உள்ளதுடன், தொடர்ச்சியாக மீளாய்வு மற்றும் தந்திரோபாயங்களைப் பின்பற்றி ஆபத்தைக் ''குறைப்பதற்கு'' கூட்டுத்தாபனம் உறுதியாக நிற்கின்றது. இந்த இலக்கை அடைந்து கொள்வதற்காகப் பல்வேறு வகைகளில் தந்திரோபாயங்கள் தயாரிக்கப்பட்டு செயல்படுத்தப்படுகின்றன.

ஆபத்தான சூழல்

2022 ஆம் ஆண்டு நிதியாண்டு மிகவும் சவாலதான ஆண்டாக இருந்தது. எவ்வாறாயினும் செயற்திறனான தலைமைத்துவத்துடன் மரவளங்களை வினைத்திறனாக முகாமை செய்வதன் ஊடாக இந்த நிச்சயமற்ற நிலையைத் தவிர்த்து எமது அடிப்படை வியாபாரத்துடன் பலமாக வளர்ச்சியடையும் என்பது எமது நம்பிக்கையாகும். மேலும் பல்கைப்படுத்தலான கைத்தொழிலில் இருத்தல் மற்றும் ஆபத்து முகாமை செயற்பாட்டின் போது கூட்டுத்தாபனத்துக்குப் பலமாக இருந்ததுடன் பொருளாதார பின்னடைவுப் பின்னணியில் இருந்த போதும் நிலையான முன்னேற்றமொன்றைப் பெற்றுக் கொண்டோம்.

ஆபத்து கட்டுப்பாடு

ஆபத்து முகாமைத்துவம் தொடர்பில் பணிப்பாளர் சபையின் முக்கிய பொறுப்பாக இருப்படுடன் ஆபத்து முகாமை தொடர்பாக மேற்பார்வை பொறுப்புள்ள கணக்காய்வு குழுவொன்றினால் இதற்கான பணிப்பாளர் சபைக்குத் தேவையான ஒத்துழைப்பு வழங்கப்படுகின்றது. ஆபத்துக்களை இனங்காணுதல், மதிப்பீடு, முகாமைத்துவத்தைக் குறைத்தல் மற்றும் ஆபத்தைக் கண்காணித்தல் உட்பட உள்ளகக் கணக்காய்விற்கும் மற்றும் பணிப்பாளர் சபைக்கு அபாயங்களை அறிக்கையிடுவதற்கும் ஒவ்வொரு பிரிவுத் தலைவரும் பொறுப்பிற்குக் கட்டுப்பட்டவராக இருப்பர்.

ஆபத்து முகாமைத்துவச் செயற்பாடு

அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் ஆபத்து முகாமைத்துவச் செயற்பாடு எல்லா வகையிலும் வியாபார மற்றும் நிதி ஆபத்து முறையாக இனங்காணுதல் பகுப்பாய்வு செய்தல் மற்றும் பொறுப்பேற்றல் என்பன உறுதிப்படுத்தப்படும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது. இச்செயற்பாடு ஆபத்துக் கட்டுப்பாட்டு நடைமுறைக்கு வசதிகளை வழங்குவதுடன் வியாபாரத்தின் அனைத்துப் பிரிவிலும் ஆபத்து உருவாவதற்கு முன்னர் ஆபத்துக்களை இனங்காணக்கூடிய கலாசாரம் (Risk aware culture) இனை ஏற்படுத்தும் போதியளவு ஆபத்துக்களை மதிப்பீடு செய்தல், இனங்காணுதல் மற்றும் குறைத்தல் என்பன உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

1. **ஆபத்துக்களை இனங்காணுதல்**

   நிறுவனத்தின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக உதவும் அல்லது தவிர்க்கும்.·. தடைகளை ஏற்படுத்தும் ஆபத்துக்களைக் கண்டுபிடித்தல், இனங்காணுதல் மற்றும் விபரப்படுத்தலே ஆபத்தை இனங்காணுதலின் நோக்கமாகும். ஆகத்தை இனங்காணும் போது வியாபாரத்துக்குரிய போதுமான சாத்தியக் கூறுகள், நாளதுவரையாக்கப்பட்ட தகவல்கள் முக்கியமாக இருப்பதுடன் நோக்கங்கள் ஒன்றோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட அளவில் தாக்கமளிக்கும் நிச்சயமற்ற தன்மையை இனங்காண்பதற்காக நிறுவனத்திற்கு பல்வேறுபட்ட நடைமுறைகள் பயன்படுத்தப்படுகின்றன.

2. **ஆபத்துப் பகுப்பாய்வு**

ஆபத்துப் பகுப்பாய்வின் அடிப்படை நோக்கம் ஆபத்தின் தன்மை மற்றும் பொருத்தமான சந்தர்ப்பங்களில் தாக்கமளிக்கும் அளவு உட்பட இலட்சணங்களை விளங்கிக் கொள்வதாக இருப்பதுடன் ஆபத்து பகுப்பாய்விற்கு, நிச்சயமற்ற நிலைமை, ஆபத்தின் பின்விளைவுகள், ஆபத்து மூலங்கள், மாதிரிகள், நிகழ்ச்சிகள், சம்பவங்கள், கட்டுப்பாடுகள் மற்றும் அவற்றின் செயற்திறன் தொடர்பாக விபரமாக பகுப்பாய்வுகள் உள்ளடங்கும். தரவுகளின் பல்வேறுபட்ட தன்மை, சிக்கலான நிலைமை, பகுப்பாய்வின் நோக்கங்களின் அடிப்படையில் தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் இயலுமை மற்றும் நம்பகத்தன்மை மற்றும் காணப்படும் வளங்கள் அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்படலாம். சந்தர்ப்பம் அல்லது நிலைமையின் அடிப்படையில் மற்றும் பாதுகாப்பின் பேரில் பகுபாய்வுத்திறன் முறைமைகள் தரமான பொருண்மையான அல்லது இதன் கலப்பு ஆகும்.

3. **ஆபத்தின் மதிப்பீடு**

தீர்மானம் எடுக்கும் மதிப்பீட்டிற்குத் தேவையான ஒத்துழைப்பினை வழங்குதல், ஆபத்து மதிப்பீட்டின் அடிப்படை நோக்கமாகக் குறிப்பிடலாம். ஆபத்துப் பகுப்பாய்வின் பெறுபேறுகள் நிர்ணயிக்கப்பட்ட ஆபத்து நியதிகள் என்பவற்றுடன் ஒப்பிடப்பட்டுக் கிடைக்கும் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆபத்து முகாமைத்துவத்திற்காக மேலதிக நடவடிக்கைகளின் தேவைப்பாடு இனங்காணல் மதிப்பீட்டுசெயற்பாட்டில் உள்ளடங்கும். அத்தீர்மானங்கள் பின்வருமாறு

- எவ்வித நடவடிக்கையும் எடுக்காமை
- ஆபத்துக்கான சிகிச்சை முறைகளைக் கருத்திற் கொள்ளுதல்
- அவதானத்தின் தாக்கங்களை மேலும் விளங்கிக் கொள்வதற்காக கூடுதலாகப் பகுப்பாய்வு செய்தல்
- காணப்படும் கட்டுப்பாடுகளைப் பேணிச் செல்லல்
- நோக்கங்களை மீண்டும் கருத்திற் கொள்ளல்

4. **ஆபத்துக்களுக்கான சிகிச்சை**

ஆபத்துக்களுக்கான சிகிச்சை செயற்பாட்டின் நோக்கம் ஆபத்தை தீர்வு செய்வதற்காக மாற்று வழிகளை இனங்கண்டு செயற்படுவதாகும். அது கீழே காட்டப்பட்டுள்ளவாறு புனரமைப்புச் செயற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

- ஆபத்துக்கான சிகிச்சைக்காக மாற்றுவழி தயாரித்தலும் தெரிவு செய்தலும்
- தெரிவு செய்யப்பட்ட மாற்றுத் திட்டங்கள் மற்றும் செயற்படுத்தல்
- செயற்படுத்தப்பட்ட சிகிச்சை செயற்திறனை மதிப்பீடு செய்தல்
- எஞ்சிக் காணப்படும் ஆபத்தின் தாக்கம் நிறுவனத்திற்கு ஏற்றுக் கொள்ள முடியுமா எனத் தீர்மானித்தல்
- ஏற்றுக் கொள்ள முடியாதெனின் மேலும் சிகிச்சை முறைகளை செயற்படுத்தல்

ஆபத்து வெப்ப வரைபடம் (Risk Heat Map)



ஆபத்து வெளிப்பாடு	நோக்கங்கள்	ஆபத்தைக் குறைக்கும் தந்திரோபாயங்கள்
நிதி ஆபத்து முகாமைத்துவம்		
1. திரவ மற்றும் நிதி முகாமைத்துவம்	சந்தை வாய்ப்புக்களுக்கு வேகமாக பொறுப்பேற்றல் தெரிவிக்கும் உறுதிப்படுத்துவதற்காக உடனடி நிதியை வழங்கும் இயலுமையை உறுதிப்படுத்தல்	நீண்ட கால கடன் மூலம் சொத்துக்களுக்கு நிதி வழங்கல்
	எப்போதும் "போதியளவு" திரவத் தன்மை மட்டத்தைப் பேணிச் செல்லல்	எப்போதும் கூட்டுத்தாபனம் குறுங்கால கடன் பெறும் வசதிகளைப் பெற்றுக் கொள்ளல்
		செலவின கட்டுப்பாட்டிற்காக நிதி அதிகாரம் பெறுமதி அடிப்படையில் பகிரப்பட்டுள்ளன
		எதிர்கால நிதித் தேவைப்பாட்டிற்காக சமர்ப்பிக்கக் கூடிய புத்தகப் பெறுமதியை விட கருத்திற் கொள்ளக் கூடிய சந்தை பெறுமதியுடனான காணி மற்றும் கட்டிடங்கள் கூட்டுத்தாபனத்திடம் காணப்படுகின்றன.
		வெவ்வெறு நிதி நிறுவனங்கள் மூலம் நிதித் தேவைப்பாட்டை நிறைவேற்றிக் கொள்ளல்

2. வட்டி வீத ஆபத்து	உறுதியற்ற வட்டி வீதத்தின் பாதகமான தாக்கத்தைக் குறைத்தல்	கூட்டுத்தாபனத்தின் முதலீட்டுக்காக முடியுமான வரை முடியுமான அளவு வட்டி வீதத்தை பெற்றுக் கொள்வதற்காக வங்கியுடன் கலந்துரையாடல்
	கடன் எடுத்தல் கிரயத்தை குறைந்த மட்டத்தில் பேணுவதை உறுதிப்படுத்துதல்	உயர் கிரயத்தைக் குறைக்கக் கூடிய வகையில் உள்நாட்டு வட்டி வீதங்களில் பாதகமான தளம்பல்களைத் தவிர்ப்பதற்காக வழங்குனர்களிடமிருந்து கடன் பெற்றுக் கொள்ளல் மற்றும் கலந்துரையாடல்
	பங்கின் மீதான இலாபத்தை உச்சப்படுத்தல்	குறைந்த gearing வீதத்தை பேணிச் செல்ல மற்றும் விளைவுள்ள பயனுள்ள மூலதன முகாமைத்துவம்
வியாபார ஆபத்து முகாமைத்துவம்		
3. கடன் ஆபத்து	கடன்பட்டோர் கடன் தவிர்ப்பினை அண்மித்த ஆபத்தைக் குறைத்தல்	கடன் கொள்கையை அபிவிருத்தி செய்தல் மற்றும் குறைத்தல்
		அனைத்து பிரதான வாடிக்கையாளர்களுக்கும் வங்கி பிணை பொறுப்பு மற்றும் வைப்புகளை மற்றும் பிணைகளைப் பெற்றுக் கொள்ளல்
		கடன் வழங்குவதற்கு முன்னர் வாடிக்கையாளரின் கடன் வழங்கும் தகைமைகளை உறுதிப்படுத்துவதற்காக கூடுதலான மதிப்பீடு செய்யும் செயற்பாட்டை பின்பற்றுதல்
		கடன்பட்டோரின் மீதிகளை அண்மித்து மேற்பார்வை செய்தல் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரித்தல் மற்றும் அச்செயல் நடவடிக்கைத் திட்டம் எதிர்பார்த்த வகையில் செயற்படுவதை உறுதிப்படுத்தல்
4. சொத்துக்கள் ஆபத்து	தீயினால், திருட்டினால் மற்றும் இயந்திர உபகரணங்கள் பழுதடைவதால் ஆபத்துக்களைக் குறைத்தல்	சகல தொட்டுணரக் கூடிய சொத்துக்களுக்கும் விரிவான காப்புறுதி மேவுகை பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.
		கட்டாய தவிர்ப்பு பராமரிப்பு நிகழ்ச்சித் திட்டத்தைச் செயற்படுத்துதல்
		தீயணைப்பு போன்ற துறைகளில் ஈடுபட்டுள்ள ஊழியர்களுக்காக பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தைச் செயற்படுத்தல்.
5. உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் தொடர்புடைய ஆபத்துக்கள்	கூட்டுத்தாபனத்தின் சொத்துக்களைப் பாதுகாப்பதற்காக போதியளவு உள்ளகக் கட்டுப்பாட்டு முறையொன்றைப் பேணுதல்	முறைமைக் கணக்காய்வு, இருப்பு மற்றும் பணத்தை கணக்கிடல் உட்பட சகல கணக்காய்வுப் பிரிவினால் செயற்படும் கட்டுப்பாட்டுப் பொறிமுறையொன்றைச் செயற்படுத்தல்.
		கூட்டுத்தாபனத்தின் செயலாற்றலின் இலக்குகளுக்கு இணங்குவதாக உறுதிப்படுத்துவதற்காக பாதீட்டு செயற்பாட்டிலும் பாதீட்டு கட்டுப்பாட்டு செயன்முறையொன்றைச் செயற்படுத்தல்.

6. நன்மதிப்பும் தொடர்புடைய ஆபத்தும்	நன்மதிப்பிற்குத் தாக்கம் ஏற்படுத்தும் காரணிகள் உருவாகுவதைத் தவிர்த்தல்	உற்பத்திகளின் தரத்தை அதிகரிப்பதற்காக தொடர்ச்சியான பயிற்சி, தரத முகாமைத்துவம் மற்றும் சான்றுறுதிப்படுத்தும் நிகழ்ச்சிகளை செயற்படுத்தல்
	எமது செயற்பாட்டுக்குப் புறம்பாக நன்மதிப்பு தொடர்பான நெருக்கடியொன்று ஏற்பட்டால் அதன் தாக்கத்தைக் குறைத்தல்	அவ்வப்போது உள்ளக மற்றும் வெளிவாரி தரப் பரிசோதனை மேற்கொள்ளல்
		உற்பத்தி வசதிகளுக்காக தொடர்ச்சியான முதலீட்டு மற்றும் மேம்படுத்தும் நடவடிக்கைகளை எடுத்தல
		வெளிவாரி தரக் கட்டுப்பாட்டு நிறுவனங்கள் மூலம் உறுதிப்படுத்தல்களைப் பெற்றுக் கொள்ளல்
		தரப்படுத்தப்பட்ட உற்பத்தி செயற்பாடுகள்
7. மனித மூலதனமும் தொழிலாளர் ஆபத்தும்	தடையின்றி தொடர்ச்சியான தொழிற்பாட்டு செயற்பாட்டை உறுதிப்படுத்தல்	ஊக்குவிப்பு படியாகவும் நலன்புரி செயற்பாடுகள் மூலமும் ஊழியர் நலன்களை விரிவுபடுத்தல்
	ஒரு மானிட எஜமானாக என எம்மை ஈர்த்தல், ஊக்கம், வெற்றிகரமாக செயற்படுகிறது. அபிவிருத்தியைத் தக்க வைத்தல் மற்றும் தரமான ஊழிய மூலதனத்தை ஈர்ப்பது	ஊழியர் ஆட்சேர்ப்பு, செயலாற்றல் மதிப்பீடு மற்றும் உள்ளக மற்றும் வெளிவாரி பயிற்சி நிகழ்ச்சிகள் தொடர்பான மனிதவளப் பிரிவின் செயற்பாடுகளை மேம்படுத்தல் செயலாற்றல் அடிப்படையிலான கலாசாரமொன்றை கூட்டுத்தாபனத்தில் பேணுதல்
		செயலாற்றல் பேரிலான கலாசாரமொன்றை கூட்டுத்தாபனத்தில் பேணிச் செல்லுதல்
8. தொழில்நுட்ப ஆபத்து	தற்போதைய தொழிநுட்ப வளர்ச்சியுடன் இணைந்து செயற்படல் காலாவதியானவைகளிலிருந்து தவிர்ந்து கொள்ளல்	புதிய தொழிநுட்பம் மற்றும் தானியங்கி செயற்பாட்டுக்காக தொடர்ச்சியான முதலீடு
		ஆண்டு பூராகவும் ஆராய்ச்சி அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக முதலீடு செய்தல்
9. சந்தை போட்டி ஆபத்து	எமது சந்தைப் பங்கை உச்சப்படுத்தல்	உயர் தரமாக உற்பத்தியை சந்தைக்கு வழங்குதல்
	அடிப்படை உற்பத்திகளின் மூலம் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்	கூறு விலைகளில் போட்டித் தன்மையை உறுதிப்படுத்துவதற்காக உற்பத்தி செயற்திறன் மற்றும் வினைதிறனை அதிகரித்தல்
		தேவைப்பாடுகளை இனங்காண்பதற்காக சந்தை ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல்
		சந்தை பிரசித்தப்படுத்தல் மற்றும் இலக்கு விற்பனை மூலம் கூட்டுத்தாபனத்தின் இருப்பை மேலும் உறுதிப்படுத்திக் கொள்ளல்
		காட்சிக் கூடங்களில் வாடிக்கையாளர் தொடர்பு முகாமைத்துவ சேவை நிகழ்ச்சிகளை நடத்துதல்
10. சுற்றாடல், அரசியல் மற்றும் ஒழுங்குபடுத்தல் ஆபத்து	எமது கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட வெளிச் சூழலில் ஏற்படக் கூடிய எதிர்த்தாக்கங்களைக் குறைத்தல்	ஊழிய அதிகாரிகளினால் நிர்ணயிக்கப்பட்டுள்ள நியதிகளுக்கு இணங்குதல் மற்றும் இணங்குதலை உறுதிப்படுத்துதல்
	ஒழுங்குபடுத்தல் தேவைப்பாட்டிற்கு இணங்குதல்	சட்ட ரீதியான மற்றும் ஒழுங்கு முறை நிறுவனங்களின் தேவைப்பாட்டுடன் இணங்கிச் செல்லலல்

நிறுவனத்தின் சமூகப் பொறுப்பு

ஒரு பொறுப்புள்ள அரசாங்க நிறுவனமாக, அனைத்து உள்ளக மற்றும் வெளிவாரி தரப்பினரதும் தற்போதைய மற்றும் எதிர்கால நிலைத்திரு தன்மையும் எங்களது நிலைத்திரு தன்மையும் அத்தியாவசியமான காரணி என்று நாங்கள் நம்புகிறோம். அதற்கிணங்க மர வியாபாரத்தை மேலும் பொறுப்புடனும் நிலைபேறானதாகவும் அபிவிருத்தி செய்வதற்கும் பொருளாதார வளர்ச்சியை அடைவதற்கும் புதிய தந்திரோபாயங்களை ஏற்படுத்துவதே எமது நோக்கமாகும்.

கன்றுகளைப் பகிர்ந்தளித்தலும் மரநடுகை நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குதல்

அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் 14 பிராந்தியங்களில்நடத்திச் செல்லப்படுகின்ற 28 நாற்றுமேடைகளின் மூலமாகவும் பெறுமதி மிக்கவும் ஏனைய இனங்களிலுமான நாற்றுக்கள் உற்பத்தி செய்யப்படுவதோடு அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களுக்கு இலவசமாக வழங்குதல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சிப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. மரநடுகை நிகழ்ச்சித் திட்டங்களின் மூலம் மர இனங்களைப் பிரச்சாரம் செய்வதன் ஊடாக உள்நாட்டு மரக் கைத்தொழிலை நிலைபெறச் செய்வதற்கும் உயிர்ப் பல்வகைத்தன்மையை விருத்தி செய்வதற்கு அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் எதிர்பார்க்கின்றது. மேலும், தாவர சமூகம் சார்ந்த காபன் எண்ணிக்கையை அதிகரிப்பதன் மூலம் காலநிலை சீர்கேடுகளுக்கு தீர்வைத் தேடுதல், நாட்டில் வனப் போர்வையை அதிகரித்தல் மற்றும் கிராமிய பொருளாதாரத்தை உறுதிப்படுத்தல் இந்நிகழ்ச்சித் திட்டங்களின் பிரதான நோக்கங்களாகும். நிலையான அபிவிருத்தி இலக்குகளில் (SDGs) எமது பகுதியான நிலையான மர உற்பத்தியில் அடிப்படையில் மரம் (பொருள்) நுகர்வினை அதிகரித்தல், கல்வி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக ஒத்துழைப்பினை வழங்குதல் போன்றவற்றில் அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் கவனம் செலுத்தியுள்ளதோடு கன்றுகள் உற்பத்தி மற்றும் மரநடுகை நிகழ்ச்சித் திட்டங்களுக்காக அனுசரனையை வழங்குவதன் மூலம் சூழல் பாதுகாப்பு தொடர்பான நிலையான அபிவிருத்தி இலக்கினை அடைந்து கொள்வதற்கு நாட்டுக்கு ஒத்துழைப்பினை வழங்குவதும் இடம்பெறுகின்றது.

2022 ஆம் ஆண்டில் வெவ்வேறு மரநடுகை நிகழ்ச்சித் திட்டங்களுக்காக 68,603 கன்றுகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதோடு 2022 ஆம் ஆண்டில் அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் நாற்றுமேடைகளின் மூலம் 65,468 கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. கன்றுகள் பகிர்ந்தளிக்கப்பட்ட விசேடமான சந்தர்ப்பங்கள் கீழே குறிப்பிடப்படுகின்றன.

- சுற்றாடல் அமைச்சு - 5400 கன்றுகள்
- லேக்ஹவுஸ் - வரையறுக்கப்பட்ட இலங்கையின் ஐக்கிய செய்திப் பத்திரிகை நிறுவனம்- 1650 கன்றுகள்
- பசுமை அறுவடை வியாபாரம் - 3000 கன்றுகள்
- அஜித் ராஜபக்ஷ அறக்கட்டளை - 2250 கன்றுகள்
- பிரதேச செயலகம் (நாடு பூராகவும்) - 4732 கன்றுகள்
- பிரதேச சபைகள் (நாடு பூராகவும்) - 1545 கன்றுகள்
- பாடசாலைகள் (நாடு பூராகவும்) - 2918 கன்றுகள்

இலங்கை பொலிஸின் சூழல் பாதுகாப்பு பிரிவுடன் ஒன்றிணைந்து மேற்கொண்ட மரநடுகை நிகழ்ச்சித்திட்டம்

மரநடுகை நிகழ்ச்சித்திட்டத்துக்காக டீவீ தெரணவுக்கு கன்றுகளை அன்பளிப்பு செய்தல்.

"The Little Forester Program" - சிறிய வன விஞ்ஞானம்

வன வளங்கள் நிலையான முகாமைத்துவம் உலகம் முழுவதும் சூடான தலைப்பொன்றாகும். இலங்கைச் சமூகம் சூழல் பாதுகாப்பு பற்றி முக்கிய கவனத்தைச் செலுத்துகின்றது எனினும், நிலையான எண்ணக்கருவை நன்றாக விளங்கிக் கொள்ளப்படவில்லை. அதனால், தொடர்ச்சியான கண்காணிப்புடன் "நிலையான" எண்ணக்கருவை கருப்பொருளாகக் கொண்டு மிகவும் பயனுள்ள நிகழ்ச்சித் திட்டமொன்றை ஒழுங்கு செய்வது முக்கியமானதாகும்.

அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை விஞ்ஞான அபிவிருத்தி சங்கம் (SLAAS) டீபிரிவு (விவசாய மற்றும் வன விஞ்ஞானம்) உடன் ஒன்றிணைந்து "The Little ForesterProgram 2022" ஏற்பாடு செய்துள்ளது. இலங்கையில் வன பாதுகாப்பு திணைக்களமும் இந்நிகழ்ச்சித்திட்டத்துக்கு ஒத்துழைத்தது. நிகழ்ச்சித்திட்டத்தைச் செயற்படுத்துவதற்காக இலகுவாகப் பிரவேசிக்க முடியுமான குழுவாக இருப்பது பாடசாலை மாணவர்கள் என இனங்காணப்பட்டுள்ளதோடு அதன்படி அம்மாணவர்களை இலக்காகக் கொண்ட மரநடுகை, அவற்றின் பராமரிப்பு மற்றும் அது பற்றிய அறிக்கையினைத் தயாரிப்பதற்குத் தேவையான வழிகாட்டல்கள் வழங்கப்பட்டன.

வேவெல்தெனிய வீரசூரியகந்த கனிஷ்ட வித்தியாலயத்தில் *"The Little Forester Programme"*

இந்நிகழ்ச்சித்திட்டம் 2022 ஆம் ஆண்டில் வேவெல்தெனிய வீரசூரியகந்த கனிஷ்ட வித்தியாலயத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட்டது. மரநடுகை செயற்றிட்டங்களுக்கு மேலதிகமாக விவசாய உபகரணங்கள் மற்றும் அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் வியீடுகளின் தொகுப்பொன்று (நிலையான வன முகாமைத்துவம், உயிர்ப் பல்வகைத்தன்மை, அபூர்வமான மர நிர்மாணக் கலை, வெவ்வேறான அரி மரங்கள் பற்றிய இனங்கள் பற்றிய பத்திரங்கள்) பாசாலைக்கு அன்பளிப்பு செய்யப்பட்டன. பாடசாலை மாணவர்களினால் நடப்பட்ட கன்றுகள் குறைந்த பட்சம் ஆறு மாதங்கள் பார்த்துக் கொள்ளும் பொறுப்பு மாணவ மாணவிகளுக்கு ஒப்படைக்கப்பட்ட அனைத்து பராமரிப்புகள் / கண்காணிப்புக்கள் வழங்கப்பட்டுள்ள துறைகளைக் கைப்புத்தகத்தில் பதிவிடுவதற்காக வழிகாட்டப்படுகின்றது.

உள்ளக பயிற்சி நிகழ்ச்சிகள் பற்றிய தகவல்கள்

பல்வேறு நிகழ்ச்சிகளினூடாக ஊழியர்களின் நிபுணத்துவத்தை விருத்தி செய்வதற்காக அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் உயர்ந்த முயற்சியை ஏற்கின்றது. மர தொழிநுட்ப பயிற்சி நிறுவனம் (TTTI) எனும் கூட்டுத்தாபனத்தின் பயிற்சி நிறுவனம் ஆவதோடு அது பாரிய பரப்பளவில் பயிற்சியை வழங்குகின்றது. மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு (TVEC) கீழ் மர தொழிநுட்ப பயிற்சி நிலையம் பதிவு செய்யப்பட்டுள்ளது. (பதிவு இலக்கம் (P01/0365)

நடத்தப்பட்ட/ தனிப்பட்ட ரீதியாக கலந்து கொண்ட பயிற்சி நிகழ்ச்சிகள்	பயிற்சி நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை	இலக்கு வகைகள்	பயிற்சியளிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை
தாபன விதிக்கோவை (TTTI)	01	பிரதான அலுவலகத்தின் பிரிவுகளின் முகாமையாளர்கள்.·. முகாமைத்துவ உதவியாளர்கள்	80
ISO 9001: 2015 தர முகாமைத்துவ அமைப்பு	03	பூஸ்ஸ வளாகத்தில் தெரிவு செய்யப்பட்ட பணிக்குழு மற்றும் பிரதான அலுவலகத்தில் தெரிவு செய்யப்பட்ட பணிக்குழு	75
AutoCAD –தளபாடங்களை நிர்மாணித்தல்	01	பூஸ்ஸ மற்றும் அம்பாறை தளபாட தொழிற்சாலைகளில் உற்பத்தி உதவியாளர்கள்	05
வள வினைதிறனும் சுழற்சிப் பொருளாதாரமும்	01	பிரதான அலுவலகத்தின் பிரிவு முகாமையாளர்கள்	10
நிகழ்நிலை தொழிற்சாலை அமைப்பு	01	தளபாட தொழிற்சாலைகளின்மு-காமையாளர்களும் தரவுகளை உள்ளடு செய்யும் செயற்படுத்துனர்கள்	30
கிழிக்கும் ஆலைகள் பற்றிய பயிற்சி (TTTI)	01	அரசாங்க மரக் கூட்டுத்தாபன கிழிக்கும் ஆலைகளின் பணிக்குழு	46
கணணிப் பயிற்சி (TTTI)/ தகவல்கள் தொழிநுட்பப் பிரிவு	04	முகாமைத்துவ உதவியாளர்கள்	29
மென்மையான மரம் மற்றும் மூங்கில் பாதுகாப்பு	01	மூழ்கும் மற்றும் வெற்றிட அழுத்த சுத்திகரிப்பு நிலையங்களின் பிரிவினதும் பூஸ்ஸ, கெப்பெடிபொல வளாகங்கள் மற்றும் பண்டாரவளை பிராந்தியத்தின் முகாமையாளர்கள்	15

நடத்தப்பட்ட/ தனிப்பட்ட ரீதியாக கலந்து கொண்ட பயிற்சி நிகழ்ச்சிகள்	பயிற்சி நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை	இலக்கு வகைகள்	பயிற்சியளிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை
அறிவு முகாமைத்துவம்	01	பிரதான அலுவலகத்தின் பிரிவுகளின் முகாமையாளர்கள்/ முகாமைத்துவ உதவியாளர்கள்	10
விநியோகம் மற்றும் தொடர்பாடல (TTTI)	01	காட்சியறைகள் (தளபாடம்) முகாமையாளர்கள் மற்றும் காட்சியறை பணிக்குழுவினர்	30
பகுதி முகாமைத்துவம் மற்றும் ஏற்பாடு செய்தல்	01	பிரதான அலுவலகத்தினதும் கல்தெமுல்ல வளாகத்தின் இருப்பு பொறுப்பாளர்கள்	05
டீசல் ஜெனரேட்டர் பராமரித்தல்	01	கல்தெமுல்ல வளாகத்தின் பொறியியல் உதவியாளர்கள்	01
ஒழுக்க நடைமுறைகள்	01	கனிஷ்ட / மத்திய முகாமையாளர்கள்/	122
தீயும் பாதுகாப்பும் பற்றிய பயிற்சி	01	ராதெஸ பிரதான அலுவலகத்தின் வெவ்வேறு பதவிகள்	70
பிரதான செயலாற்றுகை குறிகாட்டிகள் (KPI)	01	ராதெஸ பிரதான அலுவலகத்தின் முகாமையாளர்கள்	30
இருப்பு முகாமைத்துவம்	01	இருப்பு பொறுப்பாளர்கள்/ முகாமைத்துவ உதவியாளர்கள்	04
மனித வள முகாமைத்துவம்	05	வெவ்வேறு பதவிகள்	15
ஆங்கிலம்	04	வெவ்வேறு பதவிகள்	09
ஆலோசனை	02	வெவ்வேறு பதவிகள்	01
கணக்கீடு	01	பிரதி முகாமையாளர்கள்	01
இறக்குமதி மற்றும் ஏற்றுமதிச் செயன்முறை	01	பிரதான அலுவலகத்தின் முகாமையாளர்கள்	25
சாரதிகளுக்கான பயிற்சி	01	பிரதான அலுவலகத்தின் சாரதிகள்	24
உளவியலுக்கான ஆலோசனை (TTTI)	01	கல்தெமுல்ல வளாகத்தின் வெவ்வேறு பதவிகள்	40
கணக்காய்வு	01	ராதெஸ நாடு பூராகவுமுள்ள கணக்காய்வு அதிகாரிகள்	34
SWOT பகுப்பாய்வு மற்றும் உந்துதல்	01	பிரதான அலுவலகத்தின் வெவ்வேறு பதவிகள்	100
தொழிலாளர் சட்டம்	01	மனித வள மற்றும் நிர்வாகப் பிரிவின் முகாமையாளர்கள்	06
டீசல் ஜெனரேட்டர்	01	டீசல் ஜெனரேட்டர் செயற்படுத்துனர்கள்	10
தீ பயிற்சி	01	பூஸ்ஸ வளாகத்தின் வெவ்வேறு பதவிகள்	25

வியாபார முகாமைத்துவம் மற்றும் தகவல் பரிமாற்றத் தொழிநுட்பம்	01	தகவல் தொழிநுட்ப பிரிவின் முகாமையாளர்கள்	06
முதுமாணிப் பட்டம்/ பட்டம்/ முதுமாணிப் பட்ட டிப்ளோமா/ சான்றிதழ் (ஊழியர்களின் தனிப்பட்ட விருப்பின் அடிப்படையில் வெளி நிறுவனமொன்றினால் வழங்கப்படும்)	27	வெவ்வேறு பதவிகள்	28
மொத்தம்	**69**		**886**

2022 ஆம் ஆண்டில் மொத்த பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் – 69

மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை – 886

மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை – ரூ 3,855,849/=

இதற்கு மேலதிகமாக அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் ஆராய்ச்சி அபிவிருத்தி மற்றும் பயிற்சிப் பிரிவு, சீனாவின் NAFGA (National Academy of Forestry and Grassland Administration) நிறுவனத்துடன் இணைந்து வெளிநாட்டு நிகழ்ச்சித்திட்டங்களை அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் ஊழியர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கைகளை செய்துள்ளது. அனைத்து நிகழ்ச்சிகளும் நிகழ்நிலை முறையில் நடத்தப்பட்டன.

நிறுவனம	நிகழ்ச்சித்திட்டம்	நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை	பங்குபற்றிய ஊழியர்களின் எண்ணிக்கை
NAFGA (National Academy of Forestry and Grassland Administration) China	Seminar on Import and Export Management and Protection of Endangered Species for officials from Developing Countries	01	05
	Seminar on Sustainable Forest Management and Development for officials from Developing Countries	01	07
	Seminar on Pomiculture Techniques for officials of Developing Countries	01	04
மொத்தம்		**03**	**16**

அரிமர வல்லுனர்களுக்கான **NVQ** பயிற்சி அம்பாறை தளபாட தொழிற்சாலை

தீ பாதுகாப்பு பயிற்சி - பத்தரமுல்லை பிரதான அலுவலகம்

SWOT பகுப்பாய்வு மற்றும் உந்துதல் பற்றிய பயிற்சி - பிரதான அலுவலகம் பத்தரமுல்லை

அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் சாரதிகளுக்கான பாதுகாப்பாக வாகனம் செலுத்துதல் பற்றிய பயிற்சி- பத்தரமுல்லை பிரதான அலுவலகம்

வெளிப் பயிற்சிகள் மற்றும் அறிவூட்டும் நிகழ்ச்சிகள் பற்றிய தகவல்கள்

அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் அரச மற்றும் தனியார் பிரிவினருடன் தொடர்புபட்டு அரிமர மற்றும் வனச் செய்கை சார்ந்த விடயங்கள் பற்றி அறிவூட்டும் பணிகளில் ஈடுபட்டது. அரிமர தொழிநுட்ப பயிற்சி நிறுவனம் (TTTI) வெளிப் பயிற்சி நிகழ்ச்சிகளுக்கான முக்கியமான கடமையொன்றினை நிறைவேற்றுகின்றது. வெளி நபர்களுக்காக வழங்கப்பட்டுள் பயிற்சி சந்தர்ப்பங்கள் கீழுள்ளவாறு ஆகும்.

நிறுவனம்	மாணவர்கள்/ ஊழியர்களின் எண்ணிக்கை
அரிமர விஞ்ஞான மற்றும் அரிமர தொழிநுட்பம் பற்றிய விரிவுரைகள், இலங்கை வன வித்தியாலயங்களின் மாணவர்கள்	27
உயர் தொழிநுட்ப நிறுவனம் - காலி	30
இராணுவர் வளங்கள் நிலையம்	34
இலங்கை பல்கலைக்கழகம் ஜயவர்தனபுர	103
மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு (NVQ)	47
கிரிஉல்ல கல்வி வலயம்- உயர் தர மாணவர்கள்	55
மொரட்டுவை பல்கலைக்கழகம் - கட்டடக்கலை திணைக்களம்	35
இலங்கை வான் படை தலைமையகம்	13
கடல் மற்றும் சமுத்திர விஞ்ஞான எக்கடமி	20
பிரதேச செயலகம் - தலாவ	40
மொத்தம்	**404**

இலங்கை இராணுவப் படையினருக்காக வழங்கப்பட்ட அரிமரங்களை இனங்காணுதல் பற்றிய பயிற்சி

கிரிஉல்ல கல்வி வலயத்தில் உயர் தர, உயிர்ப் அமைப்பு பொறியியல் மாணவர்களுக்காக நடத்தப்பட்ட அரிமரப் பாதுகாப்பு பற்றிய பயிற்சி

NVQ மதிப்பீடுகளுக்கானபங்களிப்பு

அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தில் அரிமர தொழிநுட்பப் பயிற்சி நிறுவனம் (TTTI) தேசிய பயிலுனர் மற்றும் தொழிற்பயிற்சி அதிகாரசபை (NAITA) உடன் தொடர்பு கொண்டு தச்சுத் தொழிலாளர்களுக்காக தேசிய தொழிற் தகைமைகளுக்கான இறுதிப் பரீட்சைகளில் NVQ 3 ஆம்கட்டம் மற்றும் 4 இல் இறுதி மதிப்பீடுகள் இடம்பெறும். இறுதிப் பரிசோதனைக்குத் தேவையான மூலப்பொருட்கள், கருவிகள் மற்றும் உபகரணங்கள் மற்றும் பயிற்சி இடங்களை வழங்குவதனால் NAITA வினால் பெயரிடப்பட்ட மாணவர்களுக்கும் பரீட்சை மேற்பார்வையாளர்களுக்கும் வசதிகள் வழங்கப்படும். 2022 இல் 19 மாணவர்கள் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்டனர்.

NAITA உடன் ஒன்றிணைந்து NVQ- RPL இறுதி மதிப்பீடுகள் கல்தெமுல்லை TTTI இல் நடாத்தப்பட்டது.

2022 இல் அரிமரம் சார்ந்த ஆய்வுக் கல்விகள்

ஆராய்ச்சி அபிவிருத்தி மற்றும் பயிற்சி பிரிவினால் அரிமரம் சார்ந்த ஆராய்ச்சி பல கல்விகள் இடம்பெற்றதோடு அவை சஞ்சிகைககள் மற்றும் மாநாட்டு சாராம்சம் மற்றும் மாநாடுகளில் ஆய்வுக் கட்டுரைகளாக பிரகடனப்படுத்தப்பட்டன. இக்கல்விகளில் கண்டுபிடிப்புக்கள் அரிமரம் மற்றும் வன விஞ்ஞானம் பற்றி மாணவர்களுக்கும் ஆய்வாளர்களுக்குப் போன்றே அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் துறைப் பயன்பாடுகளில் பாவனைக்காக மிக முக்கியமானதாகும்.

கீழே காட்டப்படுவது பிரகடனப்படுத்தப்பட்ட கல்விகளாகும்.

Journal papers

C. K. Muthumala, Sudhira De Silva, P. L. A. G. Alwis and K. K. I. U. Arunakumara. 2022.International Wood Products Journal, Strength index-based timber classification of Sri Lankan timbers and potential for finger-joint production from wood off-cuts, Taylor and Francishttps://doi.org/10.1080/20426445.2022.2117929

C. K. Muthumala, K. K. I. U. Arunakumara, Sudhira De Silva and P.L. A. G.Alwis. 2022. Evaluation of the Flexural Strength and Failure Modes of Seven Types of Finger Jointed Wood Species, J Fail. Anal.andPreven. 22, 680–689 (2022).https://doi.org/10.1007/s11668-022-01358-0

Wijayawardene, N. N., Muthumala, C. K. et al. 2022. Necessity of a National Fungarium and a Culture Collection for Fungi in Sri Lanka, Chiang Mai J. Sci. 2022; 49(2): 248-271 https://doi.org/10.12982/CMJS.2022.027

C. K. Muthumala . 2022. Anatomical Study of Mangrove Timber Species in Sri Lanka, The Sri Lanka Forester, Vol.41, Forest Department, p-87-102.

சர்வதேச மாநாட்டு ஆய்வுப் பத்திரிகைகள்

R. S. Brahmanage, N.N. Wijayawardene, C. M. Nanayakkara, C.K. Muthumala, S. Wijesundara, D.Q.Dai and K.G.S.U.Ariyawansa. 2022. Investigation of Eucalyptus Foliar Pathogens in Sri Lanka, International Conference on Development and Utilization of Fungai Resources, China

C.K. Muthumala, K.K.I.U. Arunakumara, Sudhira De Silva,P.L.A.G. Alwis and S.M.J.P.Dayawansha. 2022. Shrink index-based timber classification and finger joint production, International Conference on Sustainable Built Environment 2022.

கண்காட்சிகள்

அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தினால் அரிமர நிலையான பாவனைக்காக பிரபல்யப்படுத்தும் பணிகளைச் செயற்படுத்துவதில் ஈடுபடுகின்றது. அதனால் அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் கண்காட்சிகளுக்கு கலந்துகொண்டு பொதுமக்களின் அறிவை விருத்தி செய்கின்றது.

1. BMICH இல் நடைபெற்ற தளபாட நிர்மாணக் கலைஞர்களின் கண்காட்சி- 2022
2. தெஹிவளை தேசிய மிருகக்காட்சிசாலையின் கண்காட்சி

தெஹிவளை தேசிய மிருகக்காட்சிசாலையின் கண்காட்சி

தளபாட நிர்மாணக் கலைஞர்களின் BMICH இல் நடைபெற்றகண்காட்சி-2022

வெளி நபர்களுக்கான தொழிநுட்ப உதவி

அரிமரம் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக ஆராய்ச்சி அபிவிருத்தி மற்றும் பயிற்சி பிரிவு வெளி நிறுவனங்களுக்காக தொழிநுட்ப உதவியினை வழங்குகின்றது. உதாரணமாக, தளபாடங்களைக் கொள்வனவு செய்வதன் கொள்முதல், மரத் தளபாடங்களுக்காக விவரக் குறிப்புக்களைத் தயாரித்தல், அரிமரப் பாவனை பற்றிய ஆலோசனைகள் போன்றவையாகும். இதன்படி, 2022 இல் அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் கீழுள்ள நிறுவனங்கள்/ நிகழ்ச்சிகளுக்கு உதவி செய்தது

1. 2050 காபன்வெளியேற்றத்தினைக் குறைக்கும் திட்டத்தினைத் தயாரிப்பதற்கு ஒத்துழைத்ததோடு அதற்காக சுற்றாடல் அமைச்சுக்கு மூலோபாய திட்டமொன்றைத் தயாரிப்பதற்கு உதவி செய்தல்.
2. இலங்கை தேயிலைக் கைத்தொழிலுக்காக அரிமர எரிபொருள் நிலையான பாவனைக்காக செயற்பாட்டுக் குழுவுக்கு ஒத்துழைப்பு வழங்குதல்.
3. NCS மற்றும் விளையாட்டுக்கள் அரிமர

உற்பத்திகளை ஏற்பாடு செய்யும் பாடத் தொடர்களைத் தயாரிப்பதற்காக NAI வ்யுவுக்கு தொழிநுட்ப உதவிகளை வழங்குதல்.

4. வன வித்தியாலயத்தின் மாணவர்களுக்காக வன விஞ்ஞானம் மற்றும் அரிமர தொழிநுட்ப ஆலோசனைகளை வழங்குவதற்கு ஒத்துழைப்பு வழங்குதல்.
5. சிறீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் வன விஞ்ஞானம் மற்றும் அரிமர விஞ்ஞானம் பற்றிய பாடத் தொடர்களைத் தயாரித்தல்.

அரிமரங்களை இனங்காணல் மற்றும் அரிமர அறிக்கைகளை வெளியிடுதல்.

உடற் கூறியல் விஞ்ஞான அம்சங்களின் மூலம் அரிமரங்களை இனங்கண்டு கொள்வதற்காக அரிமர உடற் கூறியல் அம்சங்களைப் பயன்படுத்துவதற்கு ஆராய்ச்சி அபிவிருத்தி மற்றும் பயிற்சிப் பிரிவு நவீன தொழிநுட்பங்களைப் பயன்படுத்துகின்றது. இச்செயன்முறையின் கீழ் வருடாந்தம் அரிமரங்களை இனங்கண்டு கொள்ளும் சான்றிதழ் மற்றும் ஏனைய அறிக்கைகள் சுமார் 150-200 அரச நிறுவனங்கள், அரசு அல்லாத நிறுவனங்கள் மற்றும் நபர்களுக்கு வழங்கப்படும். அரிமரங்களை இனங்காண்பதற்கு மேலதிகமாக MOR, MOE, சுருக்க சோதனை, அடர்த்தி பரிசோதனை,அரிமர பாதுகாப்பு பரிசோதனை, (Boron, CCB) ஆற்றல் பன்புகள் பரிசோதனை போன்ற ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதன்படி 2022 ஆம் ஆண்டில் கீழ்வரும் அறிக்கைகள் வெளியிடப்பட்டன.

அரிமரங்களை இனங்காண்பதற்கான பரிசோதனை செய்யப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை 163 ஆவதோடு வெளியிடப்பட்ட மொத்த அறிக்கைகளின் எண்ணிக்கை 158 ஆகும்.

அறிக்கையின் விபரம்	அறிக்கைகளின் எண்ணிக்கை
அரிமரத்தை இனங்காணல்	79
அரிமர ஈரலிப்பினை பரிசோதித்தல்	24
அரிமர அடர்த்தி பரிசோதனை	17
போரோன் பரிசோதனை	09
ஊஊடீ பரிசோதனை	03
அரிமரங்களின் உறுதி ஆற்றல்	04
ஏனையவை (தொழிநுட்ப அறிக்கை மற்றும் களப் பயணத்தின் மூலம்)	22
மொத்த அறிக்கைகளின் எண்ணிக்கை	**158**



அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் அரிமர கூடத்தில் UTM உபகரணத்தின் மூலம் அரிமரங்களின் உறுதி ஆற்றலைப் பரிசோதனை செய்தல்

IISO 9001:2015 நிலைமை முகாமைத்துவ அமைப்பு நிறுவுதல்

அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் பூஸ்ஸ தளபாட வளாகத்துக்குஐளுழு 9001:2015நிலைமை முகாமைத்துவ அமைப்பு சான்றிதழைப் பெற்றுக் கொண்டது. உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தையினுள் தளபாட ஏற்றுமதிக்கு அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் பெருமையை உயர்த்துவதற்காக இந்நிலைமைச் சான்றிதழ் மிக முக்கியமானதாகும்.

இச்சான்றிதழ் பூஸ்ஸ தளபாட வளாகத்துக்கும் தலைமை அலுவலகத்துக்கும் செல்லுபடியாவதோடு அதன் சுற்றுச்சூழலுக்கு கீழே குறிப்பிடப்படும் செயன்முறைகள் உள்ளடங்குகின்றன.

பூஸ்ஸ :அரிமரங்ளை கிழித்தல், பதப்படுத்தல், பாதுகாத்தல், அரிமரப் பாகங்களின் உற்பத்தி மற்றும் பொருத்துதல், தளபாடங்களை களஞ்சியப்படுத்துதல்

பிரதான அலுவலகம்: சந்தைப்படுத்தல், மனித வள முகாமைத்துவம், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பயிற்சி, கொள்வனவு செய்தல் மற்றும் நிர்மாணிப்புக்கள்.



Certificate of Conformity

MGMT. SYS. RvA C 155

SLAB ACCREDITED ISO/IEC 17021 QMS-001-01

The Sri Lanka Standards Institution
Certifies that the Quality Management System of

STATE TIMBER CORPORATION
"SAMPATHPAYA",
NO. 82, RAJAMALWATTA ROAD, BATTARAMULLA,
SRI LANKA

has been assessed and approved in accordance with
the requirements of ISO 9001:2015/ SLS ISO 9001:2015

Certificate No: QSC 10084
This certificate issued on 2022-08-16 is valid up to 2025-08-15
Date of first certification 2022-08-16

SCOPE OF CERTIFICATION

DESIGN, DEVELOPMENT AND MANUFACTURE OF WOODEN (TIMBER) CARVINGS, BUILDER'S CARPENTRY AND JOINERY, ORNAMENTAL ITEMS; MANUFACTURE OF SEASONED (DRIED) AND UNSEASONED (GREEN) SAWN TIMBER, CHEMICALLY TREATED (PRESERVED) AND UNTREATED (UNPRESERVED) SAWN TIMBER; AND PROVISION OF SEASONING AND TREATMENT PROCESSES FOR SAWN TIMBER.

This approval is subject to the continued satisfactory operation of the organization's Quality Management System. This certificate is also applicable to the sites described in the authorized schedule bearing the same number and date as in this certificate. The authorized schedule describes site specific activities/ functions.

DIRECTOR GENERAL/CEO

SRI LANKA STANDARDS INSTITUTION
No. 17, Victoria Place, Elvitigala Mawatha, Colombo 08, Sri Lanka
